Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**English Academy**

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மின் அஞ்சல் - thangan 672002 @ yahoo.com

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்

Better place for your Children

(சி-186)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 8 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 18 (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 55

# ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்ற இந்தியா தொடர்ந்தும் மறுப்பு

## அமைச்சர் மிலிந்தவின் முயற்சி பிசுபிசுப்பு

நாளை ஆரம்பமாகவுள்ள ஒஸ்லோ மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. புதுடெல்கி சென்ற அமைச்சர் மிலிந்த மொறகொட, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ரா ஆகியோரைச் சந்தித்து இது குறித்துப் பேச்சுக்கள் நடத்தியும் இந்தியா தன் நிலையிலிருந்து மாறவில்லை எனக் கூறப்படுகிறது.

ஒஸ்லோவுக்கு, இந்தியா தனது அரசியல் பிரதிநிதி எவரையும் அனுப்பப்போவதில்லை என இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் நவேஜ் சர்ணா தெரிவித்தார். எனினும் அமைச்சர் மிலிந்த இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை வெளியிட அவர் மறுத்து விட்டார். இலங்கையில் அமைதி ஏற்படுவதை இந்தியா வரவேற்கின்றது. ஆனால் நாம் முன்பு கூறியது போல் ஒஸ்லோவில் எமது அரசியல் பிரதிநிதியை அனுப்ப

(10ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு உதவவே அமெரிக்கா ஒஸ்லோ மாநாட்டுக்கு செல்கிறது

## தூதரகச் செயலர் அறிவிப்பு

ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்கா பங்குபற்றுவது அரசாங்கத்திற்கு உதவுவதற்காகவே. விடுதலைப் புலிகளோடு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை எனத் தெரிவித்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முதலாம் நிலைச் செயலாளர் மலார்ஜ் பிறஷ் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இணக்கப்பாடு தோன்றியிருப்பதாக வெளியாகியுள்ள செய்தி பற்றி, நேற்று வெளியிட்ட பத்திரிகைகளுக்கான தகவலொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான செயறபாடுகளில் அமெரிக்கா எத்தகைய அக்கறையும் கொண்டிருக்கவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ்ஊம் பங்குபற்றுவார் எனத் தெரியவருகிறது.

# வீட்டினுள் கைக்குண்டு வீச்சு தாயும் பிள்ளைகளும் காயம்!

## கொடிகாமத்தில் நேற்றிரவு சம்பவம்

(கச்சாய்)

**கொடிகாமத்தில் நேற்றிரவு நடைபெற்ற கைக்குண்டுவீச்சுத் தாக்குதலில் குடும்பப்பெண் ஒருவரும் அவரது இருபிள்ளைகளும் காயமடைந்துள்ளனர்.**

நேற்று இரவு 9 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் கொடிகாமம் வடக்கைச் சேர்ந்த க.சாந்தா (வயது-40) என்பவரும் இவரது பிள்ளைகளான க.குவேதினி (வயது-14) க.துஷியந்தன் (வயது -17) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் மாவீரர் துயிலும் இல்லத்திலிருந்து சற்றுத் தொலைவில் மேற்படி சம்பவம் நடைபெற்றது.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர்களின் வீட்டுக்கதவைச் சற்றுத் திறந்து இனந்தெரியாத நபர் ஒருவர் கைக்குண்டு ஒன்றை உள்ளே எறிந்துவிட்டு ஓடித்தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வீட்டில் தங்கியிருந்த ஏனைய குடும்ப உறுப்பினர்கள் தெய்வாதீனமாக காயங்கள் ஏதுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. (க),(33)

# அன்ரன் பாலசிங்கம் இன்று ஒஸ்லோவுக்கு

ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்றும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், திருமதி அடேல் பாலசிங்கமும், இன்று லண்டனிலிருந்து ஒஸ்லோ செல்லவுள்ளனர்.

இதேவேளை -

புதுடெல்கி சென்றிருந்த அமைச்சர் மிலிந்த மொறகொட, எதிர்பார்த்தபடி நேற்று அங்கிருந்து நேரடியாக ஒஸ்லோ செல்லவில்லை.

கொழும்புக்குத் திரும்பிய அவர் இன்றே ஒஸ்லோ பயணமாவார் எனத் தெரியவருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், நூர்தீன் மசூர் மற்றும் உயரதிகாரிகள் ஆகியோர் நேற்று முன்தினமே கொழும்பிலிருந்து ஒஸ்லோ புறப்பட்டுச் சென்றனர் என்பது தெரிந்ததே.


## கனடா தூதரகக் குழு தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

கனடா தூதரகக்குழு ஒன்று விடுதலைப்புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்தது.

இரண்டு மணி நேரமாக நடந்த இச்சந்திப்பில்- வட,கிழக்கில் மேற்கொள்ளவேண்டிய புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றிப் பிரதானமாக ஆராயப்பட்டது.

# நெடுந்தீவு படகுசேவை நேற்றும் நடைபெறவில்லை



நெடுந்தீவுக்கான பயணிகள் படகுச்சேவை நேற்றும் நடைபெறவில்லை. நேற்று நெடுந்தீவிலிருந்து வந்த படகுகளில் பொதுமக்கள் மட்டுமே செல்லலாம் என்றும் உணவுப் பொருட்களுடன் பல்கலைக்கழக மாணவர்கள் செல்லமுடியாது என்றும் கடற்படையினர் தடைவிதித்தனர்.

எனினும், மாணவர்களையும் தம்முடன் வர அனுமதிக்கும்படி மக்கள் கோரியபோது, கடற்படையுடன் வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போது வானத்தை நோக்கி ஒரு வேட்டும் தீர்க்கப்பட்டது. தொடர்ந்து கண்காணிப்புக்குழுவினர் முன்னிலையில் நடைபெற்ற சமரச முயற்சிகளையடுத்து நெடுந்தீவுக்கு இன்று படகுச்சேவை நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (112,113)


# அமைப்பாளர் பதவியிலிருந்து அனுருத்த ரத்வத்த நீக்கம்?

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கி விட்டு அவருக்குப் பதிலாக அனுரா பண்டாரநாயக்காவை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொலை மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் .ரத்வத்த மீது சுமத்தப்பட்டுள்ளதால் அவரது மக்கள் செல்வாக்கு சரிந்துள்ளதாகவும், இதனால் அவரை மேற்படி பதவியிலிருந்து அகற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி அண்மையில் கண்டியில் முக்கிய கலந்துரையாடலொன்றும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடந்துள்ளது.

## விண்ணாணம் விநாசியர்



அப்ப மருமோளுக்கு மாமா தேவையாயிருந்தது. இண்டைக்குப் பார் கழட்டிவிடப் பாக்கிறா...

## பிள்ளைகளின் கவனயீனத்தைத் தடுக்க

# இலவச பாடநூல்கள் இனிமேல் செயலகமூடாக பெற்றோருக்கு!

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்களின் விநியோகம் இனிவருங்காலங்களில் மாவட்ட செயலகங்களின் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளது.

அடுத்த ஆண்டுக்குரிய பாடப்புத்தகங்களை மேற்படி புதிய திட்டத்தின்படி விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - அடுத்த ஆண்டு முதல் மாணவர்களுக்கான பாடநூல்கள் அனைத்தும் அவர்களின் பெற்றோரிடமே கையளிக்கப்படவிருக்கின்றன. மாணவர்கள் இலவச பாடநூல்களை கவனமின்றிப் பயன்படுத்துவதைத் தடுக்கும் முகமாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (01)

SERENDIB

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

விமான சேவை

J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,

(சி-148) CMB 505632 - 390128 - 0777-517019

# மாற்றுக் கட்சி உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். சுபத்திரன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கட்சிகளின் அரசியற்செயற்பாட்டை முடக்க எவருக்கும் உரிமை கிடையாது என ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் சார்பில் சுபத்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நெடுந்தீவிலும் அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் ஈ.பி.டி.பி.யினருக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், மாற்று அரசியற் கருத்துக் கொண்டோருக்கெதிராக மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தலாகும். அது உலகளாவிய அளவில் ஜனநாயகம் தொடர்பாகவும், மனித உரிமை தொடர்பாகவும் உள்ள சட்டதிட்டங்கள் கருத்துக்கள் ஜனநாயக நாடுகளின் நடைமுறைகளுக்கு விரோதமானதாகும்.

சுயநிர்ணய உரிமை என்பது, எவ்வாறு ஒரு தேசிய இனம் தனது தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் உரிமையாகுமோ, அவ்வாறே தமது பிரதிநிதிகளைத் தமது தலைவர்களைத் தெரிவு செய்யும் உரிமையும் அந்தத் தேசிய இனத்திற்குரியது.

ஒரு கட்சிக்கு மக்களின் ஆதரவு இருக்கிறதோ இல்லையோ அதன் செயற்பாட்டை முடக்க ஒருவருக்கும் அதிகாரம் கிடையாது.

சமாதானம், தமிழ் மக்களின் அபிலாஷை என்பன தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகம், மனித உரிமை என்பவற்றையும் உள்ளடக்கியதே. ஒவ்வொரு தனிமனிதனதும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இங்கு சமூக நிறுவனங்கள் தவறான வழியில் செயற்பட நிர்ப்பந்திக்கப்படுகின்றன. உலகம் ஒரு கிராமமாக மாறிக்கொண்டிக்கும் இன்றைய சூழ்நிலையில் சமூகத்தின் பல்வேறு தரப்பினரதும் உரிமைகள் வலியுறுத்தப்படும் காலகட்டத்தில் இத்தகைய நிலைமைகளை சர்வதேச சமூகம் அனுமதிக்க முடியாது என்பதை தயவுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என்றுள்ளது.



தெல்லிப்பளை பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சமாசம், சிறிபாஸ்கரன் விளையாட்டரங்கில் மேற்கொண்ட பனம் விதை நடுகையைப் படத்தில் காணலாம்.


ராஜா யாழ்ப்பாணம்.



STR பிலிம்ஸ் வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)



உள்ளூர், வெளியூர், சர்வதேச தொடர்புகளுக்கு
கிறிஸ்மஸ் பண்டிகைக்கான விசேட சலுகை




எமது கையடக்கத் தொலைபேசியை
வாங்கும்
புதிய வாடிக்கையாளர்களுக்கு
25-11-2002 இல் இருந்து 25-12-2002 கிறிஸ்மஸ் வரையிலும் 1000 ரூபா பெறுமதியான ஒரு Kit Card முற்றிலும் இலவசம்.
மேலும் விலைச் சலுகைகள்
ALCATEL புதியவிலை 12425/- பழையவிலை 12950/-
SAGEM புதியவிலை 11950/- பழையவிலை 12950/-
இந்த வாய்ப்புக்களுக்கு முந்துங்கள்
தனியாகவும் இணைப்புக்கள் வழங்கப்படும்
(SIM CARD)
தொடர்புகளுக்கு-
அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகத்தர்கள்
DIAL LINKS
THE PHONE SHOP
இல. 204, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
0777736469, 222-5485




எமது DIALOG அலைவரிசை வெகுவிரைவில் குடாநாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.
(சி-201)


## இன்றைய நாள் இனிய நாள்

**24-11-2002 - ஞாயிற்றுக்கிழமை**

| | | |
|---|---|---|
| திதி | :- | அபரபட்ச சதுர்த்தி பகல் 10.03 வரை அதன்மேல் பஞ்சமி |
| நட்சத்திரம் | :- | புனர்பூசம் இரவு 12.04 வரை அதன்மேல் பூசம் |
| ராகுகாலம் | :- | 4.41 - 6.11 |
| சுபநேரம் | :- | 9.11 - 10.41 |

**மேடம்** :- பணவரவு, முயற்சி திருவினையாக்கும், மந்திரப்பயிற்சி, நண்பர்களுடன் களிப்பு, உள்ளூர் பிரயாணம், கல்வி நிலை சமம்.

**இடபம்** :- தேகசுகக் குறைவு, வீட்டில் தேவையற்ற பட்டிமன்றம், இதனால் கவலை, அயலவர்களுடன் மௌனம் சாதிப்பது நன்று, கல்வி முன்னேற்றம்.

**மிதுனம்** :- வீட்டில் விஷேச உணவுப்பாகம், தெய்வ வழிபாடு, சமயநூல் பாராயணம், பெண்கள் சிநேகிதிகளுடன உள்ளக்களிப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**கர்க்கடகம்** :- தேகசுகக் குறைவு, மனச் சஞ்சலம், எதிர்பாராத செலவு, கர்வநிலை, கல்வி முன்னேற்றம்.

**சிங்கம்** :- சீர்திருத்த வேலையில் முன்னேற்றம், அயலவர்களினால் மதிக்கப்படுதல், மங்கள வைபவங்களில் பங்கு, தனிமையில் இனிமை, கல்விமுன்னேற்றம்.

**கன்னி** :- பெண்களினால் மகிழ்ச்சி, சுபகாரியங்களில் பங்கு, மாலை வேளைக் கொண்டாட்டங்களில் பங்கு கொள்ளல், கல்வி முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- பிதாவுடன் மனஸ்தாபம், எதிரி தொல்லை, பிரச்சினைகள் தேடி வருதல், மௌனநிலையில் இருத்தல், கல்வி நிலை சமம்.

**விருச்சிகம்** :- பிரயாணத்தில் கவனம், கௌரவக்குறைவு, புதிய ஒப்பந்தங்கள் எழுதுவது தவிர்த்தல் வேண்டும், கல்வி முன்னேற்றம்.

**தனு** :- சுற்றுலாப் பயணங்கள், நண்பர்கள் உறவு, மேலதிக உணவினால் மகிழ்ச்சி, சில சமயம் அசாதாரண நிலையும் வரலாம், மங்கையர் நவநாகரிக உடையினால் மகிழ்வு, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**மகரம்** :- மனஸ்தாபப்பட்டவர்கள் மகிழ்வுடன் அணைதல், கடன்பட்டவர்கள் கடன் அடைத்தல், நோய் நீக்கம், கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**கும்பம்** :- தேகசுகக்குறைவு, பொதுவேலையில் குற்றம் கேட்டல், வேளைதவறிய உணவு, புத்திரரால் கவலை, கல்வியில் ஊக்கம் வேண்டும்.

**மீனம்** :- வீட்டில் செலவினம், வாகனச்செலவு, பெண்கள் சுகக் குறைவு, வரவேண்டிய பணம் தாமதம், மந்திரப்பயிற்சி கல்வியில் ஊக்கம் வேண்டும்.


T.V., டெக், CD, VCD என்பவற்றை துரித கதியில் திருத்தம் செய்து கொள்ளவும், உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்
A.K.ELECTRONIC
254, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், மந்திரா நடித்த
லவ் டுடே
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும் இரவு 8.45 காட்சி
UNIVERSAL SOLDIER
(சி-139)

YOGI HOME SCIENCE ACADEMY
Pastry Demonstration Class
பேஸ்ரி செய்முறை விளக்கங்கள் வகுப்பு ஒருநாள் மட்டும்
24.11.2002 ஞாயிறு காலை 10 மணி முதல் ஒரு மணிவரை
1) PAFF PASTRY 2) SHORT CRUST PASTRY PIES.
3) CHOUX PASTRY 4) PIZZA
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) (சி-199)

மாவீரர் நினைவாலயம்



திறப்பு விழா அழைப்பிதழ்
காலம்: 25-11-2002
இடம் : கோவிந்தன் கடைச்சந்தி, கிளிநொச்சி.
நேரம் : முற்பகல் 11.30
சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர், ஏனைய மக்கள் போராளிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி
தமிழீழ விடுதலைப் புலிகள்
(சி-200)

# ஒஸ்லோ மாநாட்டில் கலந்துகொள்வதற்கு அன்ரன் பாலசிங்கம் எந்த நாட்டின் பிரதிநிதி?

## வண. மாதுளுவாவே சோபித தேரோ கேள்வி

(கொழும்பு)

உதவி வழங்கும் நாடுகளும், உதவியைப் பெறும் நாடும் கலந்து கொள்ளும் ஒஸ்லோ மாநாட்டில் அன்ரன் பாலசிங்கம் எதற்காகக் கலந்துகொள்ள வேண்டும் என்று தேசிய சங்க சபாவின் தலைவரான வண.மாதுளுவாவே சோபித தேரோ கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலை குறித்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்ரன் பாலசிங்கம் எந்தவொரு நாட்டினதும் பிரதிநிதி அல்ல. ஆகையால் இவர் இம்மாநாட்டில் கலந்து கொள்வது முறையற்றது.

புலிகள் ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்றுவது குறித்து அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறும் நியாயம் பொருத்தமற்றது. ஒரு தீவிரவாதக் குழுவை நாட்டின் கொள்கை வகுப்பாளர்களாக ஏற்றுக்கொள்ள வைக்கும் முயற்சியில்தான் அரசாங்கம் இறங்கியுள்ளது என்றும் வண.மாதுளுவாவே சோபித தேரோ அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டினார்.

## தமிழீழ மாவீரர் நாள் – நவம்பர் 27



மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்க தினம் அல்ல; நாம் கண்ணீர் சிந்திக் கவலைகொள்ளும் சோக தினம் அல்ல; இன்றைய நாள் எழுச்சி தினம்;

எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதிபூணும் புரட்சி தினம்.

வே. பிரபாகரன்

*தமிழீழத் தேசியத் தலைவர்*

# தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவை மீள ஆரம்பிக்க நாடாளுமன்றில் கோரிக்கை

(கொழும்பு)

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க முயற்சிகள் நடக்கின்றன. ஆனால் முன்னர் சேவை நடத்தப்பட்டு - யுத்தம் காரணமாக இடைநிறுத்தப்பட்ட மன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இச்சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் இப்பகுதி மக்கள் பொருளாதார ரீதியில் வளம் பெறமுடியும். புகையிரதத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட இக் கப்பல் சேவையை, துறைமுக அதிகார சபையின் கீழ் கொண்டு வந்து மீண்டும் சேவையை ஆரம்பித்தால் மன்னார் மாவட்ட மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வு காணமுடியும் என வன்னி மாவட்டப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

# தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகும்

## மாவீரர் நாள் தொடக்க நிகழ்வுகள்

01. பொதுச் சுடரேற்றல்
02. தேசியக் கொடியேற்றல்
03. ஈகச்சுடரேற்றல் (திருவுருவப்படம்)
04. மலர்வணக்கம்
05. அக வணக்கம்
06. உறுதியுரை எடுத்தல்
07. நினைவுரை

என்பன வரிசை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும். ஆரம்ப நிகழ்வுகள் மாவீரர் எழுச்சி நாட்களான மூன்று நாட்களிலும் நடைபெறும்.

### தேசியக் கொடியேற்றல்

மாவீரர் எழுச்சி நாட்களுக்கான நிகழ்வுகள், நவம்பர் 25ஆம் நாளன்று காலை 8.00 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும்.

மாவீரர் துயிலுமில்லங்களில் 25ஆம் நாள் காலை 8.00 மணிக்கு ஏற்றப்படும் தேசியக்கொடி, நவம்பர் 27 மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும்.

இயக்கப் பணிமனைகள், தளங்களில் முதல் இரண்டு நாட்களிலும் மாலை 6.00 மணிக்குக் கொடி இறக்கப்பட்டு மறுநாள் காலை ஏற்றப்படும். நவம்பர் 27ம் நாள் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் கொடி இறக்கப்படும்.

பொது நிறுவனங்களிலும், பள்ளிகளிலும், ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின் பகல் 12.01 இன் பின்பாகவும், மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக்கொடி இறக்கப்பட்டு மறுநாள் காலையில் ஏற்றப்பட வேண்டும்.

*- தமிழீழ மாவீரர் பணிமனை.*

# கிழக்கிலிருந்து படைகளை விலக்க வேண்டாம்!

## ஹக்கீம் அரசிடம் கோருகிறார்

(கொழும்பு)

கிழக்கிலுள்ள இராணுவத்தை விலக்க வேண்டாம் எனத் துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இருந்து கிழக்கில் திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பு வலுவாகவே இருந்து வந்திருக்கின்றது. நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பதற்கு இங்கு படைகள் இருக்க வேண்டியது அவசியம் என ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் ரெஜி ரணதுங்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## இலவசப் பாடநூல் விநியோகம்

2003ஆம் ஆண்டுக்கான இலவசப் பாடநூல்களின் முதலாவது தொகுதியான 13,920 நூல்கள் நேற்றுமுன்தினம் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளன. (61)

## புதுப்பொலிவு பெற்றுள்ள கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம்



புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் கல்லறைகள்.





துயிலும் இல்லத்தில் நேற்று சிரமதானப்பணியில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## புலிகளின் கடற்போக்குவரத்து விவகாரம்

# கண்காணிப்புக்குழுத் தலைவர் இவ்வாரம் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவார்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவதற்காக, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹோவ்டே இந்த வாரம் கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

புலிகளின் கடல்வழிப் பயணம் குறித்து எழுந்துள்ள நெருக்கடிகள தொடர்பாக ஆராயவே ஜெனரல் புறூவ் ஹோவ்டே, சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளார்.

அண்மையில் விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய மூத்த தளபதிகளான கேணல் கருணா, கேணல் பதுமன் ஆகியோர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையின்றிப் பயணத்தை மேற்கொண்டது தொடர்பாகவும் இச் சந்திப்பின்போது ஆராயப்படவுள்ளது.

முன்னதாக, இந்தப் பயணம் ஒரு யுத்த நிறுத்த மீறல் எனச் சிறிலங்கா கடற்படை, கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்திருந்தது. இது தொடர்பாக விளக்கம் கேட்டு கண்காணிப்புக்குழு சு.ப.தமிழ்ச்செல்வ னுக்குக் கடிதம் ஒன்று அனுப்பியதாகவும் தெரியவருகின்றது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக நேரில் ஆராய்வதே ஜெனரல் புறூவ் ஹோவ்டே - தமிழ்ச்செல்வன் சந்திப்பின் முக்கிய நோக்கமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ரமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.58 |
| சுபஹ் | 5.13 |
| உதயம் | 6.33 |
| ளுஹர் | 12.28 |
| அஸர் | 3.50 |
| ம..ரிப் | 6.21 |
| இஷா | 7.34 |

# கடந்த வாரம் யாழ். குடாநாட்டில் இவ்வருடத்தின் அதியுயர் மழைவீழ்ச்சி!

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ்.குடாநாட்டில் பெய்த மழை வீழ்ச்சியே இவ்வருடத்திற்கான அதியுயர் மழைவீழ்ச்சி எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை 129.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், ஆகக் குறைந்த வெப்பநிலையாக 22.4 பாகை செல்சியசும் காணப்பட்டுள்ளது. இது இவ்வருடத்தில் நாளொன்றுக்கான அதியுயர் மழை வீழ்ச்சி என திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி வே.புஷ்பநாதன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை - வியாழக்கிழமை 127.2 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. அன்றைய தினம் 22.4 பாகை செல்சியஸ் வெப்பநிலையும் காணப் பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் 21ஆம் திகதி வரை ஆயிரத்து 437.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி இருந்தபோதிலும் இவ்வருடம் நவம்பர் மாதம் 21ஆம் திகதிவரை ஆயிரத்து 186.8 மில்லி மீற்றர் மழையே பெய்துள்ளது.

இரு தினங்களாகப் பெய்த மழையினால் குடாநாட்டின் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் சூழப்பட்டதும், இதனால் தாழ்ந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் துன்பங்களை எதிர்நோக்கியதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## ஈ.பி.டி.பி. அலுவலக பாதுகாப்பு அதிகரிப்பு

(சரசாலை)

நுணாவிலில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ் அலுவலகம் இருமுறை தாக்குதலுக்குள்ளாகியதையடுத்து அலுவலகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (34)

# மயிலந்தனைப் படுகொலை தீர்ப்பு நாளை வெளியாகும்!

(கொழும்பு நிருபர்)

மட்டக்களப்பு மயிலந்தனையில் 35 அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக் கொன்றது தொடர்பான வழக்கு விசாரணைகள் யாவும் முடிவடைந்துள்ள நிலையில் நாளை திங்கட்கிழமை தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

1992 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 2ஆம் திகதி இடம் பெற்ற படுகொலை தொடர்பாக 18 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு, இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கு விசாரணைகளின் தொகுப்புரைகள் ஏற்கனவே முடிவுற்றுள்ளன. தீர்ப்பு நாளை வெளியிடப்படவுள்ள நிலையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 18 படையினரையும் விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மயிலந்தனையில் படுகொலை செய்யப்பட்ட 35 தமிழ்ப் பொதுமக்களில் 18 பேர் 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# செங்கலடியில் கைதானவர்கள் மாற்று இயக்கத் தொடர்புடையவர்கள்!

## மட்டு - அம்பாறை அரசியற்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-செங்கலடி கறுத்தப்பாலம் சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் குண்டுகளுடன் கைதுசெய்யப்பட்டவர்களுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்புகளும் இல்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் சோதனைச் சாவடியில் வைத்து குண்டுகள், கிளைமோர்களுடன் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவருக்கும் புலிகளுக்கும் எவ்விதத் தொடர்புகளும் கிடையாது. இவ்விருவரும் கடந்த காலங்களில் மாற்று ஆயுதக்குழுக்களுடன் செயற்பட்டு வந்துள்ளனர்.

தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழப்புகின்ற நோக்கில் சில சக்திகள் செயற்பட்டு வருகின்ற நிலையில், இருவர் குண்டுகள் சகிதம் கைது செய்யப்பட்டுள்ளமை திட்டமிட்ட செயற்பாடொன்றுக்கான முயற்சியாகவே கருதப்படுகின்றது என மட்டு.-அம்பாறை அரசியற்துறை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழகப் பிரச்சினைகள் ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு!

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஏற்படும் பிரச்சினைகளையும் மாணவர்களிடையே எழும் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஏற்படுத்தப்படவுள்ளது.

அண்மையில் ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த கொலைச் சம்பவம், மற்றும் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற சம்பவங்களைக் கருத்திற்கொண்டே இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அரசாங்க, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதில் அங்கம் வகிப்பார்கள். எதிர்க்கட்சிகளின் கருத்துக்களைப் பெறுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவும் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார். பல்கலைக்கழக ஆசிரிய சமூகம் மற்றும் தொழிற்சங்கங்களின் ஆலோசனைகள் பெறப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# காலை தொழிலுக்குச் சென்றவர் மறுநாள் பிணவறையில் மீட்பு

(சிறுப்பிட்டி)

காலையில் மீன் வியாபாரத்திற்காக சைக்கிளில் புறப்பட்டவர் மறுநாள் காலை பிணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் மீட்கப்பட்டார்.

இதுபற்றித் தெரியவருவதாவது- இணுவில் மேற்கைச் சேர்ந்த மு.ஆறுமுகம் (வயது 56) கடந்த 21 ஆம் திகதி காலை தொழிலுக்குப் புறப்பட்டு, மாலையாகியும் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் தெல்லிப்பளை, சங்கானை, கோப்பாய், யாழ்ப்பாண வைத்தியசாலைகள் முழுவதும் இவரைத் தேடியும் எந்தத்தடயமும் கிடைக்கவில்லை.

இறுதியில் இவர் கொழும்பிலிருந்து வந்த டொல்பின் வான் ஒன்றுடன் விபத்துக்குள்ளானதாகவும் படுகாயமுற்ற இவரை அதே வானில் ஏற்றி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததாக விபத்தை நேரில் கண்ட ஒருவர் உறவினர்களிடம் தெரிவித்தார்.

உறவினர்களும் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்றபோது, இவரின் சடலம் சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியுற்றனர்.

(78)

## சாவகச்சேரி சுத்திகரிப்புத் தொழிலாளரின்

# வேலை நிறுத்த முயற்சியைக் கைவிடுமாறு கோருகிறார் படையதிகாரி

(சரசாலை)

சாவகச்சேரி நகரசபை சுத்திகரிப்பாளர்களினால் நடாத்தப்படவிருந்த வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு 521 ஆவது படையணித் தளபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை இன்னும் ஒரு வார காலத்துக்குள் வெளியேற்றத் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

நகரசபைச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள், தமது விடுதிகளில் தங்கியுள்ள படையினரை வெளியேற்றுமாறும், இல்லாவிடில் தாம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் முன்னறிவித்தல் கொடுத்ததையடுத்து - அப்பகுதிக்கு உடனடியாக விஜயம் செய்து குடியிருப்புக்களைப் பார்வையிட்ட பின்னர் படைத்தளபதி உடனடி நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தார். (34)

# குடாநாட்டுப் புற்றுநோயாளருக்கு அரோக் நிறுவனம் உதவி

(ஊரெழு)

யாழ்.குடாநாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'அரோக் சுவிஸ் சாளற்' நிறுவனம் உதவ முன்வந்துள்ளது.

ஊரெழுவில் இயங்கும் இந்நிறுவனம் சர்வதேச நாடுகளின் உதவியுடன் இயங்கி வருவதாக மேற்படி நிறுவனத்தின் இயக்குநர் திருமதி அனுலமீயர் தெரிவித்தார்.

தற்போது 11 புற்று நோயாளர்களுக்கு இலவச மருத்துவ வசதி கொழும்பில் பெற்றுக் கொடுக்கப்பட்டதென்றும், மேலும் கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 76 பேர் புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் இயக்குநர் மேலும் தெரிவித்தார். (96)

## பட்டச் சான்றிதழ் வழங்கல்

கலைமாணி 99/2000, வணிகமாணி 99/2000 பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ்கள் 19.12.2002 (வியாழக்கிழமை) அன்று மு.ப 9.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் வழங்கப்படும்.

மேற்படி பட்டச்சான்றிதழ் கட்டணமாக 200/= ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டை, வெளிவாரிப் பதிவுகள், பரீட்சைகள் அலகில் 10.12.2002க்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என உதவிப்பதிவாளர் கேட்டுள்ளார்.

## ஈவினைப் பகுதிக்கு மின்விநியோகம் இல்லை

(புன்னாலைக்கட்டுவன்)

ஈவினை மத்தி திடற்புலம் மற்றும் ஈவினை கிழக்குப் பகுதிகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கவென கடந்த ஒரு வருடத்திற்கு முன்பே மின்கம்பங்கள் நடப்பட்டபோதும், மின்சாரம் வழங் குவதற்குரிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இப்பகுதி மக்கள் மின்சார சபையினருடன் பலமுறை தொடர்பு கொண்ட போதிலும், உரிய நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.(83)

## விடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் **Martin Scorsese** இயக்கிய **'THE LAST TEMPTATION OF CHRIST'** எனும் திரைப்படம் இன்று ஞாயிறு காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

# மலேரியா வில்லைகளை அதிகமாக உட்கொண்ட யுவதி மரணம்!

பனடோலுக்குப் பதிலாக, மலேரியா நோய்க்குரிய வில்லைகளை அதிகளவு உட்கொண்ட யுவதி ஒருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கையில் வழியில் மரணமானார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில்- துன்னாலை வடக்கு, குடவத்தையைச் சேர்ந்த சிதம்பரநாதன் சிவகுமாரி (வயது 22) என்பவரே மரணமானவராவார்.

இவரது சடலம் மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு, பிரேத பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேல்பிள்ளை மேற்கொண்டார். மரண விசாரணையை நடாத்திய வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இ.கிருபாகசூரியன்- இரத்தப் பெருக்கால் உண்டான அதிர்ச்சி மரணம் எனத் தீர்ப்பளித்து, சடலத்தை இறந்தவரது தந்தையிடம் கையளித்தார். (23)


## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்.



பெயர் : பு.ரம்மியா
முகவரி: கச்சாய் வீதி, கொடிகாமம்.



பெயர் : நி.தர்சி
முகவரி: கட்சன் றோட், வட்டக்கச்சி.

மூன்றாவது அகவையில்.



பெயர் : ஸ்ரீ.விஷ்வாதிகா
முகவரி: புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம். (லண்டன்)

நான்காவது அகவையில்.



பெயர் : வி.எஸ்.ஆர் ஜீசஸ்கிங்
முகவரி: உடுவில் தெற்கு, உடுவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------
முகவரி:--------------------
பிறந்த ஆண்டு:--------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

குறிப்பு: இம்மாத முடிவு வரை மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலா

நீங்கள்
அரச,
தனியார் துறைகளில்
வேலைவாய்ப்புகளைத் தேடுபவரா?
உங்களுக்கு உதவத்
தயாராகின்றது 'நமது ஈழநாடு'!
அடுத்த வாரம் முதல்
அறிமுகமாகின்றது!

வேலை வங்கி

- பிரதி வியாழன் தோறும் -
உங்களின் எதிர்காலத்தை வளப்படுத்த
நாமும் இணைகின்றோம்




# தில்ஹாரா கொடுத்த திகில்



இலங்கை அணி தென்னாபிரிக்காவுடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி கண்டுவிட்டது. இனித் தொடரப்போவது ஒருநாள் ஆட்டங்கள். இரண்டாவது டெஸ்ட் போட்டியில், முதல் டெஸ்ட் போட்டியை விடவும் முன்னேற்றகரமாக இலங்கை செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதல் இரண்டு நாள் நன்றாக ஆடிய இலங்கை அணி, இறுதி நாளில் அவலமானதொரு தோல்வியுடன், இரண்டாவது டெஸ்ட் போட்டியை முடிக்கப்போகின்றது என்ற ஆதங்கம் இலங்கை ரசிகர்களை கவ்விப் பிடித்திருந்தது. இரண்டாவது டெஸ்டில் முதலில் துடுப்படுத்தாடிய இலங்கை அணி, ஹசான் திலகரட்ணவின் 104 ஓட்டங்களுடன் 323 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 448 ஓட்டங்களை குவித்தது. இதில் ஒரு துயரம், இணைந்தாட வீரர் இன்றி தென்னாபிரிக்கா அணித் தலைவர் ஷோண் பொலொக் ஆட்டம் இழக்காமல் 99 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டது. பொறுத்தது தான் பொறுத்தார் என்ரினி. இன்னும் ஒரு பந்தைப் பொறுத்திருக்கக் கூடாதா?

இரண்டாவது இன்னிங்சை இலங்கை அணி ஆரம்பித்தவேளை, அதிக எண்ணிக்கையான ஓட்டங்களை குவிப்பதன் மூலம் ஆட்டத்தை வெற்றி தோல்வி இன்றி முடிக்கும் நிலையை சிந்தித்திருக்கக்கூடும். ஆனால் அணித் தலைவர் மாவன் அத்தபத்து, ஒரு இலக்கை நிர்ணயிக்கவே தான் விரும்பியிருந்ததாக கூறுகிறார். எனினும் மீண்டும் என்ரினி, கலிஸ் ஆகியோரின் வேகப் பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் எட்டு விக்கட்டுக்களை அவர்களுக்குச் சமமாக பங்கிட்டுக் கொடுத்துவிட்டு 245 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தனர். அதுவும் இறுதி 8 விக்கெட்டுக்களையும் 66 ஓட்டங்களுக்கு இலங்கை இழந்தது.

**– நிர்மலன் –**

இந்நிலையில் தென்னாபிரிக்கா வெற்றிபெற எடுக்க வேண்டியது ஆக 121 ஓட்டங்கள் மட்டுமே. இது தென்னாபிரிக்க அணிக்கு ஒரு இலக்கே அல்ல. இதனை வசதியாகவே பெற்றுக்கொள்ளலாம் என தான் எண்ணியதாக ஷோண் பொலொக் கருத்துக் கூறுகிறார். ஆனால், இலங்கை அணி தான் ஒரு சர்வதேச தரம் வாய்ந்த அணி என்பதை அன்று நன்றாகவே நிரூபித்தது. முதல் பந்திலேயே சமிந்தவாஸ், ஸ்மித்தை மைதானத்திலிருந்து அகற்றியது, தென்னாபிரிக்காவிற்கு ஒரு அதிர்ச்சியாகத் தான் இருந்திருக்கும். இருந்தும் வெற்றி பெறுதல் தடைப்படாது என்றே நம்பியிருக்கும். ஆனால் தில்ஹார பெர்னாண்டோ அதி அற்புதமாகப் பந்து வீசி, தொடர்ந்து 4 விக்கட்டுக்களை சாய்த்து, 5 விக்கெட்டுக்கு 44 ஓட்டங்கள் என்று ஒதுக்கி விட்டபோது, ஷோண் பொலக்கிற்கு மின்னலடித்தது போலதான் இருந்திருக்கும். சாவா வாழ்வா என்று போராடிய இலங்கை அணியின் வேகம் தனக்குச் சில சந்தேகங்களை கொடுக்க ஆரம்பித்துவிட்டதென்கிறார் அவர். இந்நிலையில் இலங்கை அணி வெற்றி பெறும் என்று யாரும் துணிந்திருந்தால் அதில் ஏதும் மிகையில்லை. இருந்தும் மெக்கன்சியின் 39 ஓட்டங்கள் தென்னாபிரிக்காவைக் காப்பாற்றியது என்பதே உண்மை. அவரும் மார்க் பௌச்சரும் ஒரு இறுக்கமான இணைப்பை ஏற்படுத்தியிராவிட்டால் முடிவு எப்படியும் இருந்திருக்கலாம். இறுதியில், தென்னாபிரிக்கா 3 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றாலும்கூட, மிகத் தீவிரமாகப் போராடி தென்னாபிரிக்கா அணியை ஒரு உலுப்பு உலுப்பிய இலங்கை அணியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதிலும் சிறப்பாக தில்ஹார பெர்னாண்டோ அற்புதமான வீரர் என்பதை நிரூபித்து நின்றார்.

# வெற்றிக்காக உறக்கத்தை துறந்தார்



உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு றொனால்டோ என்ற பெயர் புதிதல்ல. ஆனால் பெரும் விருப்பத்துக்குரியது. இம்முறை பிரேசில் உலகக் கிண்ணத்தைப் பெற்றதில் அவரது பங்களிப்பு மிகப் பெரியது. சர்வதேசப் புகழ் வாய்ந்த பல உதைபந்தாட்ட வீரர்கள் ஐரோப்பிய கழகங்களுக்காக விளையாடுவது மிகச் சாதாரணம். அதேபோல கழகங்கள் மாறுவதும் சாதாரணம். றொனால்டோ இதுவரை விளையாடி வந்த கழகம் இன்ரர் மிலான் கழகம். ஆனால் தற்போது அவர் புதிதாக இணைந்துள்ள கழகம் றியல் மட்றிட். அணிகளும் வேறு. அணிகள் காணப்படும் நாடுகளும் வேறு. இவர் கழகம் மாறியதற்கான காரணம் இன்ரர் மிலான் அணியின் பயிற்சியாளர் ஆஜென்ரீனா நாட்டைச் சேர்ந்த பயிற்றுநர் ஹெக்ரர் கூப்பருடன் உடன்பாடான உறவை வைத்துக் கொள்ள இயலாமை தான் என்கிறார். இவர் பெறும் ஊதியம் மிக அதிகமாக இருப்பதால் உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் தன் மதிப்பையும் பெறுமதியையும் சந்தர்ப்பம் பார்த்து கூட்டுகிறார் என்ற அபிப்பிராயம் ஏற்படுமோ என்ற தயக்கத்தில், உலகக் கோப்பைப் போட்டிகளுக்கு முன்னமே கழகம் மாறும் எண்ணம் தான் கொண்டிருந்ததாக கூறுகின்றார். மேலும், தனது முழங்கால் உபாதை மூன்று வருடங்களாக தன்னை வருத்தியபோதும், தன் பழைய உச்ச நிலையைத் தான் அடைவேன் என்றும் நம்புகிறார். இன்னொரு சுவையான தகவலையும் றொனால்டோ தருகிறார்.

**– ரவீந்திரா –**

1998 இல் உலகக் கிண்ணப் போட்டியில் பிரான்சுடன் பிரேசில் இறுதியாட்டத்தில் தோல்வியுற்றது. இதற்குக் காரணம் தனக்கு ஏற்பட்ட மர்மமான வருத்தமே என்பவர், இறுதியாட்டத்துக்கு முன்னதாக உணவுண்ட பின் தான் நித்திரை கொண்டதாகவும் நித்திரையால் எழும்பியபோது தான் நோயுற்றிருந்ததையும் குறிப்பிட்டு, இம்முறை தான் உணவு உட்கொண்ட பின், நான்கு வருடத்துக்கு முன ஏற்பட்டது போல் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தில் நித்திரையே கொள்ளாமல் தனது சகாவுடன் கதைத்தே காலத்தைப் போக்கியதாகக் கூறுகின்றார். சர்வதேச புகழ்பெற்றவர்கள்கூட எதற்கெல்லாம் பயப்பட வேண்டி இருக்கிறது. இதெல்லாம் ஒரு புறமிருக்க, றியல் மட்றிட் கழகத்துடன் இணைய இவர் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத் தொகை 45 மில்லியன் யூரோக்களாகும். இலங்கை நாணயப் பெறுமதியில் ஒரு யூரோ என்பது ஏறத்தாழ 100 ரூபாய் பெறுமதியாகும். சர்வதேச புகழ் பெற்ற உதைபந்தாட்ட வீரர்கள் தங்கள் திறமையை மூலதனமாக்கி எவ்வளவு பெருந்தொகையைச் சம்பாதிக்கிறார்கள் என்பதற்கு முழுத் தொகையையும் இலங்கை ரூபாவில் மாற்றிப் பாருங்களேன்!



# முரளி எதிர்நோக்கும் முள்

தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்து அவுஸ்ரேலியாவில் நடைபெறும் முக்கோண ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்ள இலங்கை அணி அவுஸ்ரேலியா செல்லவுள்ளது. இம்முக்கோணத் தொடர், உலகக்கிண்ணப் போட்டிகளை அண்மித்து நடைபெறவுள்ளமை இலங்கைக்கு மிகவும் முக்கியத்துவமானது. இதேவேளை, ஒரு சம்பவம் இலங்கைக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை. அதாவது இலங்கை அணி பங்குபற்றும் போட்டிகளில் டரல்ஹெயர் மத்தியஸ்தம் வகிப்பார் என்பதுதான். இதன் பின்னனி 1995 இற்குச் செல்கிறது. அந்த வருடத்தில் இலங்கை, அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது முரளிதரனின் பந்துவீச்சு முறையற்றது என்று பல தடவை களத்தில் கூறி, அவரைப் பந்துவீச்சில் இருந்து ஹெயர் தடைசெய்தார். இதனைத் தொடர்ந்து முரளிதரனின் பந்துவீச்சில் தவறேதும் இல்லை என்று நிருபிக்கப் படாதுபாடுபட வேண்டியிருந்தது. இந்தச் சம்பவங்களின் தொடர்பில் முரளியின் கிரிக்கெட் வாழ்க்கை அஸ்தமித்துவிடுமோ என்ற அச்சம்கூட ஏற்பட்டது. இருந்த போதும், அவரது மனத்திடமும் நேர்மையான பந்து வீச்சும் இன்று அவரை சாதனை வீரனாக்கியிருக்கின்றன.பின்னர் 1998ம் ஆண்டிலும் முரளி பற்றிய தன் கருத்துச் சரியானதே என மீளவலியுறுத்தினார் டரல் ஹெயர். இதன் பின் இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் ஹெயர் இலங்கை ஆடும் ஆட்டங்களில் மத்தியஸ்தம் வகிக்கமாட்டார் என்று இணக்கம் காணப்பட்டது. ஆனால் பூதம் வேறொரு வகையில் புறப்பட்டது. இங்கிலாந்து -இலங்கை ஆட்டத்தில் மத்தியஸ்தம் வகித்த மத்தியஸ்தர் றொஸ் எமர்சன் முரளியின்மீது குறி வைத்தார். இதனால் முரளி மீது குறிவைக்கப்படமாட்டாது என்ற **ACB**யின் வாக்குறுதி மீறப்பட்ட நிலையில் ஒரு சங்கடமான நிலை உருவாகிப் பின்பு மெதுமெதுவாகத் தணிந்தது.



திடீரென்று தற்போது டரல்ஹயர் இலங்கை ஆட்டங்களில் மத்தியஸ்தம் வகிப்பார் என்பது இலங்கைக்குக் கசப்பானதாக இருக்கும். முரளியின் மனோநிலையிலும் தளர்வை ஏற்படுத்தக் கூடும். எனவே, உடனடியாக இலங்கை கிரிக்கெட் சபை இது விடயத்தில் ஒரு முடிவு காணவேண்டும் என்கிறார்கள் விளையாட்டு விமர்சகர்கள். ஏனெனில் உலகக் கிண்ணப்போட்டிகள் அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளை, முதல்தர பந்து வீச்சாளரின் மீதான அவதூறுகள் அணியின் மனோபலத்தையும் பாதிக்கும் என்பது உண்மை. இதற்கிடையில் ஹேர்னியா சத்திரசிகிச்சை ஒன்றிற்கு முகம்கொடுக்கும் வகையில் முரளிதரன் முக்கோணக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றாமால் விடலாம் என்ற செய்தியொன்றும் வெளியாகி இருக்கின்றது. அப்படியாயின் அவர் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கே மீண்டும் பூரண சுகநிலையில் பங்குகொள்ளக் கூடியவராக இருப்பார். ஏதோ ஒரு வகையில் இது முரளிக்கு நன்மை பயக்கும் போலத்தான் தெரிகின்றது.

**– பிரகாசன் –**

இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இலங்கை அணியினை, அவுஸ்ரேலியா அவமதித்த பல சந்தர்ப்பங்கள் நடைபெற்றுள்ளன. இதற்கும் மேலாக நிறம் சிறிது மங்கலாக இருப்பவர்கள் சாதனைகள் புரிவது, வெள்ளை நிறமுடையவர்களுக்கு அவ்வளவு திருப்தியைக் கொடுப்பதில்லை. எந்த வகையிலும் எல்லாவற்றிலும் தாம் உயர்ந்தவா கள் என்ற எண்ணம் அவர்களின் இரத்தத்தில் ஊறியிருக்கும் போலத் தெரிகிறது. ஆனால் நடைமுறை யதார்த்தம் புறம்பானது என்பதும் கிரிக்கெட்டில் முதன்மை வகித்த எத்தனையோ பேர் நிறம் மங்கலமானவர்கள்தான் என்பதும், நிதர்சனமான உண்மை. சாம்ராச்சியங்கள் சரிந்து தவிடுபொடியாகியும்கூட மனதால் கறுப்பர்களாக இருப்பவர்களைப் பற்றி என்ன கூறுவது. இது கிரிக்கெட்டின் துரதிர்ஷ்டம்!

# மந்திரத்தால் வருவதல்ல மகத்துவம்

ஆஷஸ்தொடரில் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் மத்தியூ ஹேடன் இரண்டு இனிங்ஸ்களிலும் பெற்ற 197 மற்றும் 103 ஓட்டங்களை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது. மத்தியூ ஹேடன் இதனைத் தொடர்ந்து, டொன் பிரட்மனின் வாரிசு எனப் பலராலும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டவர். இவரோ அந்தளவிற்கு தன்னை உயர்த்தவும் வேண்டாம், நான் பிரட்மனுடன் ஒப்பிடும் அளவிற்கு திறமை வாயந்தவன் அல்ல என்றும் கூறிவிட்டார். ஆனால் இவர் இன்று பலராலும் பேசப்படும் கிரிக்கெட் வீரர் என்பது மறுக்கப்பட முடியாத ஒன்று. ஏனெனில், இவர் குவிக்கும் ஓட்டங்கள் ஒருபுறம் மற்றும் தனது விக்கெட்டைக் காத்துக்கொள்ளும் திறமை மறுபுறம். அதோடு பிழைவிடாது ஆடும் தன்மை. ஹேடன் அவுட்டாகுவது என்பது வேறு, தனது விக்கெட் சரிந்து ஆட்டம் இழப்பது என்பது வேறு. அவுஸ்திரேலியப் பயிற்சியாளர் புக்கானன் கருத்துக் கூறும்போது, ஏறத்தாழ ஒருவருடமாக ஹேடன் கிரிக்கெட்டில் தாக்கப்பட்டு ஆட்டம் இழக்கவில்லை என்கின்றார். தலைசிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்குப் பந்து வீசுவதென்பது அச்சுறுத்தலான விடயம். சச்சின், ஸ்ரீவ்வோ போன்ற அனுபவஸ்தர்களுக்குப் பந்துவீசும்போது சிறு தவறும் இழைக்க முடியாது. ஏனெனில் அவர்கள் பயங்கரமாகப் பந்தைத் தாக்குவார்கள். ஹேடனும் இந்த வரிசையில் வருபவர் தான். ஹேடனின் இணை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜஸ்டின் லேங்கர் கருத்துக் கூறும்போது இவர், ஒரு சுவராகக் கொள்ளத்தக்கவர், இவரது இலக்கை வீழ்த்துவதென்பது சுவரைத் தகர்ப்பதற்கு ஒப்பாகும் என்கிறார். இவரது இணையற்ற ஆட்டத்திற்கும், தன் ஸ்தானத்துக்கு ஸ்திரம் கொடுத்த தன்மைக்கும் என்ன காரணம்? ஏனைய வீரர்களில் இருந்தும் இவர் எவ்வாறு வேறுபடுகின்றார்? தனது துறையை ஒரு தவமாகவே இவர் கருதுவது தான் இதற்குக் காரணமாக இருக்கவேண்டும். ஏனெனில் குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கும் வேளையில் தனது வீட்டை நோக்கி நடந்தே செல்கின்றார். இது தனக்குத் தானே விதித்துக்கொள்ளும் தண்டனை. அதோடு பயிற்சியாகவும் அமைந்து



விடுகின்றது. மத்தியூ ஹேடனின் பயிற்சி முறைகள் பின்வருமாறு அமைகின்றன. ஒரு நாளில் மூன்று மணி நேரம் அல்லது வாரத்தில் மூன்று தடவைகள் கடற்கரை மணலில் குறுந்தூர ஓட்டம், மணற்திட்டுக்களில் ஓடுதல், சைக்கிள் ஓட்டம், நீச்சல், நடைப்பயிற்சி இதனைச் சோர்வில்லாமல் செய்து வருகின்றார் ஹேடன். இவர் அநேகமாக பத்துக் கிலோ மீற்றர் கடற்கரை ஓரமாக நடந்து நீச்சல் குளத்திற்குச் சென்று அங்கு நீச்சலடித்து அதன் பின் இருபது கிலோ மீற்றர் சைக்கிள் ஓடித் தன் இருப்பிடத்தை அடைந்து கொள்கிறார். ஹேடன் தன் விளையாட்டு ஆயத்தங்கள் பற்றிக் கூறுகையில் - நான் முழுநாளும் நிலைத்து நின்று ஆடுவதை இலக்காகக் கொண்டு பயிற்சி செய்கிறேன் என்கின்றார். இன்றைய கிரிக்கெட் உலகின் முதற்தர வீரனாக இனங்காணப்பட்டுள்ள மத்தியூ ஹேடன், உள்ளூர் முதற்தர ஆட்டங்களில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டு அதேபோல சர்வதேச ரீதியிலும் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்கின்றார். இவர் பந்தை எவ்வகையில் சந்திக்க வேண்டுமோ அவ்வகையில் சந்தித்துக் கொள்வதால் பந்து வீச்சாளருக்கு இவர் என்ன செய்வார் என்பது புரியாத நிலையே இருக்கும். இந்நிலையில் புக்கானன் கருத்துக் கூறுகையில், தங்களால் ஹேடனின் விக்கெட்டைக் கைப்பற்ற இயலும் என்ற நம்பிக்கையுடன் பந்து வீசுவதை விட, ஹேடன் ஏதும் தவறு செய்து அதன் மூலம் ஹேடனின் விக்கெட்டைக் கைப்பற்ற முடியாதா என்ற அங்கலாய்ப்பே பந்து வீச்சாளரிடம் இருக்கும் என்கிறார். ஒருவர் சர்வதேச ரீதியில் முதன்மை பெற வேண்டுமாயின் எவ்வளவு தூரம் பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதனையும் எத்துணை உயிர்த்துடிப்புடன் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதற்கு ஹேடன் ஒரு முன்மாதிரி.

– நிமலா –

# யாழ்ப்பாணத்தில் விளையாட்டு விழா

யாழ்ப்பாண விளையாட்டு ரசிகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கூறுகிறார் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னான்டோ. 2003 ஆவணியில், 28 வருட வரலாற்றைக் கொண்ட தேசிய விளையாட்டுத் திருவிழா யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார். பல வருடங்களுக்கு முன் திருகோணமலையில் இவ்விழா நடந்ததே ஒழிய, இதன் முன்போ பின்போ தமிழ்ப் பகுதிகளில் நடைபெறவில்லை. இது தொடர்பில் அதியுயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று யாழ்ப்பாணம் வர இருக்கின்றது. இவர்கள் விளையாட்டு மைதானங்கள், இருப்பிட வசதிகள் போன்றவற்றை ஆய்வு செய்து அவற்றை மேம்படுத்துவதிலும் அக்கறை செலுத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானம் இதற்காக இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இதுமட்டும் போதுமானதாக இல்லை. இது பற்றிய கள நிலைமைகள் பரிசீலனைக்குட்பட்ட பின் மேலும் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதுவும் வேகம் வேகமாகவே நடைபெறும். ஏனெனில், தேசிய விளையாட்டு விழா நடைபெற இன்னும் 9 மாதங்கள் மட்டுமே இருக்கின்றன. ஏறத்தாழ 4000 விளையாட்டு வீரர்கள் பங்கு கொள்ளப் போகும் விளையாட்டு விழா இது. இந்த விழாவில் மாத்தறையில் பங்குகொண்ட வீர, வீராங்கனைகளை விடக் கூடிய தொகையினர் பங்குகொள்ள வேண்டுமென அமைச்சர் எதிர்பார்க்கின்றார். இன்னொன்று, அதி திறமை வாய்ந்த வீர, வீராங்கனைகள் சுண்டி எடுக்கப்படும் பொழுது அவர்களுக்கான பயிற்சி வசதிகள், புலமைப் பரிசில்கள் தாணாகவே தேடிவரும். எனவே இந்த 4 நாள் விளையாட்டு விழா தொடர்பில் எமது வீர வீராங்கனைகளை வெளிப்படுத்துவதில் எல்லோருக்கும் பங்கு உண்டு. அது மட்டுமல்ல. அடிப்படை வசதிகள் என்ற வகையில் விழா தொடர்புபட்ட சகல விடயங்களிலும் முழு ஈடுபாட்டுடன் ஈடுபட்டு மண்ணின் பெருமையை வெளிக்கொணர்வதும் அவசியம். ஏனெனில் காலம் மிகக்குறுகியது. ஆனால் பணி பாரிய பொறுப்பைக் கொண்டது.



– ஜெயா –

# இங்கிலாந்துக்கு ஒரு இடி



பிரான்ஸ் ஐரோப்பாவின் பிரபலமிக்க நாடுகளில் ஒன்று. நெப்போலியனைத் தந்த நாடு. பிரான்சியப் புரட்சியை நடாத்திய நாடு. பிரெஞ்சுமொழி ஐரோப்பாவில் மிகப் பிரசித்தம். ஏன் மெட்ரிக் முறை அளவீடுகளும் -பிரான்சுக்குத்தான் சொந்தம். அப்படியாயின் கிரிக்கெட் ஆட்டத்தின் முன்னோடிகளும் நாங்களே என்று பிரான்சியர் கூறினால் அதிலும் ஏதும் ஒரு விஷயம் இல்லாமலா போய் விடும். டிடியர் மார்க்கொய்ஸ் பிரான்சிய கிரிக்கெட் சம்மேளனத்தின் முன்னை நாள் தலைவராவார். இங்கிலாந்தில் ஆடப்படுவது போன்றதான ஒரு விளையாட்டு பிரான்சிலும் மத்திய காலத்தில் ஆடப்பட்டதாகக் கூறுகிறார். அவர் தொடர்ந்து கூறுகையில் பிரான்சின் வட பகுதியில் தான் முதன் முதலில் கிரிக்கெட் தோன்றியது. யுத்த ஓய்வு காலத்தில் இங்கிலாந்து இராணுவ வீரர்கள் தம் தாய்நாட்டுக்குச் செல்லும்போது கிரிக்கெட் ஆட்டத்தையும் இங்கிலாந்துக்குக் கொண்டு சென்றனர் என்கிறார் அவர். இன்னும் கூடுதல் ஆதாரமாக 13ஆம் நூற்றாண்டின் கையேட்டொன்றில் துடுப்பாட்டக்காரர் ஒருவர் பந்தைத் தடுத்தாடுவதான படம் இருப்பதையும் கூறுகின்றார். இருந்தபோதும் நடுநிலை ஆய்வாளர்கள் கூறும்போது, பல்வேறு நாகரிகங்களில் தடிகொண்டு பந்தை அடிக்கும் விளையாட்டுக் காணப்படுவதால் இதனை உறுதிப்படுத்துவது கடினம் என்கிறார்கள்.



யாழ். மாவட்டத்தில் முதன்முதலாக பெண்கள் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டுள்ள வேம்படி மகளிர் கல்லூரி அணியுடன் பயிற்றுநர் கே.முஹைதீன் மற்றும் பொறுப்பாசிரியைகள், அதிபர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# மீண்டும் அர்ஜுனா



அரசியல்வாதியாகி இலங்கை நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதியாக அமர்ந்திருக்கிறார் புகழ்பெற்ற கிரிக்கெட்வீரர், இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுனா ரணதுங்க. அதுவும் அண்மைக்கால இலங்கைக் கிரிக்கெட் தொடர்பான சர்ச்சைகள், தற்போதைய தென்னாபிரிக்கச் சுற்றுப் பயணம் என்பன அவரின் பார்வையை மீண்டும் கூர்மையாகக் கிரிக்கெட்டின் பக்கம் திரும்பி இருக்கிறன.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைமைப் பதவிக்குத் தான் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார் அர்ஜுனா. அணியின் தரம் வீழ்ந்து கொண்டு போவதைத் தடுக்க வேண்டியுள்ளது. ஊழல்கள், முரண்பாடுகள் நிறைந்ததாகக் கிரிக்கெட் நிர்வாகம் மாறிவிட்டது. அதே வேளை இடைக்கால நிர்வாகம் ஒன்றே ஒன்றரை வருடங்களாக இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகத்தை மேற்கொண்டுள்ளது.இப்படியான நிலையில் அர்ஜுனா ஆவேசப்படுவதில் தவறிருப்பதாக தெரியவில்லை. இதே போன்றே முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலவின் போட்டியும் இவருக்குக் கடுமையாக இருக்கும் என்பது இன்னொரு பக்கம். மறுவளமாக அரசியல் சார்ந்தோர் விளையாட்டுத்துறை ஆட்சிக் குழுக்களில் இடம் பெறமுடியாது என்பது இன்னொருவிதி. அப்படியான எதிர்புக் கிளம்பினால் இது மனிதனின் அடிப்படை உரிமைகளை மீறும் சட்டமாகும் என்று கூறும் அவர், அரசியல்வாதிகள் - விளையாட்டு ஆட்சிக் குழுக்களில் அங்கம் வகிப்பதைத் தடைசெய்யும் சட்டத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய இருப்பதாகக் கூறுகிறார். அர்ஜுனா கிரிக்கெட்டைப் பொறுத்தவரை உள்வீட்டுப் பிள்ளை. களத்திலோ, வெளியிலோ-உள்ளோ, புறமோ அவர் சந்தியாதது எதுவுமே இருக்கமுடியாது. இந்நிலையில் அவர் தலைமைப்பதவி ஏற்பது மிகவும் பொருத்தமானதாகவே இருக்கும். இதற்கு முன்னர் காலம் சென்ற டாக்டர் என்.எம் பெரேரா, காமினி திஸாநாயக்க போன்ற அரசியல்வாதிகள் இதேபோன்ற பதவிகளை வகித்திருக்கிறார்கள். எனவே அதுவும் ஒரு தடையல்ல. எதுவாக இருப்பினும் அர்ஜுனா தலைவர் பதவியைத் தட்டிக்கொள்வராயின் அவர் தகுதி, நடுநிலமை என்பவற்றைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்படுவார் என்று எதிர்பார்க்கலாம்.

– சரண்யன் –

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## ஒஸ்லோ - புதியதொரு பதிவாக...

சர்வதேச அரங்கிலும் ஈழத்தமிழர்களாலும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு - நாளை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் ஆரம்பமாகின்றது.

கடந்த காலங்களில், இவ்வாறான உதவி வழங்கும் மாநாடுகள் நடைபெற்றபோது, அதனை ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கிய தன்மையிலிருந்து மிகவும் மாறுபட்டதாக - இம்முறை ஒஸ்லோ மாநாடு எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னர் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டங்களில், சிங்கள அரசாங்கங்கள் - போரினை முன்வைத்தும், 'பயங்கரவாதத்தை' ஒழிப்பதற்காகவும் நிதி திரட்டிய காலங்கள் சென்று - இம்முறை சமாதானத்துக்கான, போரினால் சிதைவுற்ற கட்டுமானங்களைச் சீர்படுத்துவதற்கான, மக்களது புனர்வாழ்வுக்கான உதவிகளை நாடும் நிலை உருவாகியுள்ளது.

அன்றைய மாநாடுகளில் கடுமையாக விமர்சிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் தரப்பினரே, தற்போது உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் முக்கிய தரப்பினராக மாறியதும்,

கடந்த அரசாங்கங்கள் யாரைப் 'பயங்கரவாதிகளெனச்' சித்தரித்தனரோ, அவர்களது துணையுடனேயே நாட்டை இனி 'மீட்டுக்' கொள்ளமுடியும் என அமைச்சர்களே பகிரங்கமாக அறிவிக்குமளவிற்கு- புதிய சூழ்நிலை உருவானதும், ஒஸ்லோ மாநாட்டில் காணும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இந்த வகையில் - சர்வதேச சமூகத்தின் போக்கும் ஈழத்தமிழர்களுக்குச் சாதகமான வகையில் உருவாகியிருக்கும் நிலையில் -

ஒஸ்லோ மாநாட்டின் விளைவுகள் பற்றி பெரும் எதிர்பார்ப்புக்களும் நிலவியே வருகின்றன.

இந்த சர்வதேச மாநாடானது - அரசாங்கத்திற்கு எவ்வளவு தூரம் முக்கியமானதோ, அதே வகையில்- தமிழர் தரப்பிலும் இந்த மாநாடு முக்கியத்துவம் மிக்கதாகின்றது.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன் குறிப்பிடுவது போல, உதவிகளைத் திரட்டிக் கொள்வதிலும் பார்க்க, அரசியல் ரீதியில் ஒஸ்லோ மாநாட்டின் அவசியம் என்பது, தமிழர்களிடமும் மிக உணரப்பட்டதொன்றாகவே உள்ளது.

சமாதான முயற்சிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வரும் விடுதலைப்புலிகள் - தமது அமைதியின்பாலான விசுவாசத்தை வெளிக்காட்ட இந்த மாநாடு உதவப் போகின்றது.

அதேவேளை, சர்வதேச அரங்கில் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகள் பங்கேற்பதன் மூலமாக - அரசியல் ரீதியாக - தமிழர்களுக்காகப் பேசும் அதிகாரத்தை விடுதலைப்புலிகள் கொண்டுள்ளார்கள் என்ற யதார்த்தம் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உண்மைநிலையை உணர்ந்ததாகவே - தெற்கிலிருந்து எழும் கருத்துக்கள் அமைந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் பங்கேற்புக்கு எதிராக - பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் உரத்துக் கிளப்பும் எதிர்ப்புக்குரல்களின் வேகம் - இந்த உண்மையை, யதார்த்தத்தை சர்வதேசம் ஏற்றுக்கொள்கின்றதே என்ற ஆதங்கத்தில் எழுவனவாகும்.

தமது அழுத்தங்களையும், கைகளையும் மீறிக் கொண்டு - விடுதலைப்புலிகள் அங்கீகாரம் பெறுகின்றார்கள் என்ற ஆற்றாமையின் வெளிப்பாட்டையே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், லக்ஷ்மன் கதிர்காமரும், சரத் அமுனுகமவும், ரீல்வின் சில்வாவும், விமல் வீரவன்சவும் தமது பேச்சுக்கள், அறிக்கைகள் மூலமாக தெரியப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, ஈழத்தமிழர் விவகாரத்தில் அண்மைக்காலத்தில் எவ்வித அசைவையும் வெளிக்காட்டாத இந்தியாவும், ராஜ தந்திர மட்டத்திலான தனது ஆதரவை, ஒஸ்லோ மாநாட்டுக்குத் தெரிவித்திருப்பது - குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் என்றே கொள்ளமுடியும்.

ஒட்டுமொத்தத்தில் - வரலாறு முன்னெடுத்துச் செல்லும் இந்த விவகாரம் - இனிப் புதியதொரு பரிமாணத்தினூடாக வரலாற்றில் பதியப்படும் என்ற செய்தியையே ஒஸ்லோ மாநாடு எடுத்துக் காட்டியுள்ளதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

---

### இலங்கை - அமெரிக்கா புதிய உடன்பாடு

# குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த மறுதரப்பின் அனுமதி அவசியம்!

(கொழும்பு நிருபர்)

ஹேய்க் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவாளிகளை முன்னிறுத்துவது தொடர்பாக இலங்கையும் அமெரிக்காவும் புதிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும், அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸும் இவ் உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளனர். இவ் ஒப்பந்தத்தில் குற்றவாளிகளைச் சர்வதேச நீதிமன்றத்திடம் கையளிப்பதற்கு முன்னர் இரு நாடுகளும் மற்றையதன் அனுமதியைப் பெறுவது அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், எந்தவொரு நாடும் வெளிநாட்டுப் பிரஜைகளை நேரடியாகவே சர்வதேச நீதிமன்றத்தில் கையளித்து வந்தன. இனி இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இத்தகைய குற்றவாளிகளைச் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு முன்னர் - அந்த நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இந்த உடன்பாடு தற்போது செய்து கொள்ளப்பட்டதன் பின்னணி குறித்து கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது. கிழக்கில் ஒஸாமா பின்லாடனின் ஆதரவு பெற்ற முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் இயங்குவது தொடர்பான செய்திகள் வெளிவந்துள்ள நிலையில், இக்குழுக்கள் குறித்து அமெரிக்கா அச்சம் கொண்டுள்ளதா? எனவும் ஆய்வாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## இந்திய மீனவர்களுக்கும் அனுமதிப்பத்திர நடைமுறை!

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடலில் தாக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையை இந்திய அரசாங்கம் சிபார்சு செய்துள்ளது.

இரு நாடுகளும் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம், புரிந்துணர்வு அடிப்படையில் புதிய அனுமதிப்பத்திர விடயம் கையாளப்படும் என்று இந்திய வெளிநாட்டு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் புதுடெல்கியில் தெரிவித்தார்.

செப்ரெம்பர் 25ஆம் திகதி, இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த - 102 இந்திய மீனவர்களையும் 25 றோலர்களையும் பேசாலை கூட்டுறவுச் சங்கத்தினர் கைப்பற்றி இருந்தனர். பின் இந்தியத் தூதரகத்தின் முயற்சியின் பயனாக இவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொடர்ந்து பெய்த மழையினால் தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில்

(மானிப்பாய்)

குடாநாட்டில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் தொடர் மழையினால் வயல் நிலங்கள் உட்பட குடாநாட்டின் தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இம்முறை நெற்பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டி முனைப்புடன் நெல் விதைத்து ஆவலுடன் காத்திருந்த விவசாயிகள் மற்றும் சிறுபோக விவசாயிகள் இத்தொடர் மழையினால் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு பெரும்பாலான பகுதிகளின் வயல்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்துடன் நலாலி தெற்கு சங்கையான் வீதிப் பகுதி 4 அடிக்கு மேல் வெள்ளம் தேங்கியுள்ளதால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

மேலும், ஆனைக்கோட்டை- முள்ளிப்பகுதியில் தாழ்ந்த பகுதிகளிலிருந்த குடிமனைகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன. இப்பகுதி மிகவும் கவனிப்பாரற்ற, பின்தங்கிய பிரதேசமாக இருப்பதால் அவ்விடத்து மக்கள் எதுவித உதவியுமின்றி மிகவும் கஷ்டநிலைக்கு ஆளாகியுள்ளனர்.(100)

### போர் நிறுத்தக் கண்காணிப்பு தொடர்பாக



# சந்திரிகா - புறூவ் ஹொவ்டே முதற்தடவையாகச் சந்திப்பு!



(கொழும்பு)

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது கடந்த பெப்ரவரி மாதம் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்படும் விதம் குறித்தும், இதில் கண்காணிப்புக்குழுவின் பங்கு குறித்தும் புறூவ் ஹொவ்டே, ஜனாதிபதி சந்திரிகாவிடம் எடுத்து விளக்கியுள்ளார்.

இலங்கையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கடந்த ஒன்பது மாதங்களாகப் பணியாற்றி வருகின்றது. இக்குழுவின் பிரதிநிதிகள் முதல் தடவையாக ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யாழ். வைத்தியசாலைத் தாதிகள் சங்கம்

## வேலைநிறுத்தத்தில் உடனடியாக பங்கேற்பதில்லை என முடிவு!

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் நேற்றுத் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வரும் தாதியர் வேலை நிறுத்தத்தில், யாழ்.போதனா வைத்தியசாலைத் தாதிகள் உடனடியாகக் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர உயிர்காக்கும் சிகிச்சைகள் வழங்கக்கூடிய தனியார் வைத்தியசாலை இல்லாமை,

அகதி முகாம்களில் உள்ளவர்கள் மழைக்காலத்தில் தொற்று நோய்களால் பாதிக்கப்படலாம் என்ற அச்சம்,

உயிர்காக்கும் நடவடிக்கைகளுக்காக நோயாளரை உடன் வேறு வைத்தியசாலைக்குச் சிகிச்சை வழங்க போக்குவரத்து ஒழுங்கீனம் ஆகிய காரணங்களால் வேலை நிறுத்தத்தில் பங்குகொள்ளவில்லை என்று பொது வைத்திய தாதிகள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை அறிவித்துள்ளது.

இந்த முடிவுகள் தாய்ச் சங்கத்தின் அனுசரணையுடன் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## பனை, தென்னை வள அபிவிருத்தி பாதுகாப்புக்கு தனியான அமைப்பு!

(மானிப்பாய்)

வடக்கு - கிழக்கில் பனை, தென்னை போன்ற பயன்தரும் வளங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கும் பயன்களை விரிவுபடுத்துதல், நவீன தொழில்நுட்ப முறையினை அறிமுகப்படுத்துதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இத்துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் துறைசார்ந்தவர்களைக் கொண்டு பொதுவான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் தலைவராக பேராசிரியர் க.மோகனதாஸ், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த அருள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 17 பேரைக் கொண்ட இந்த அமைப்பில்- மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வன்னி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பனை, தென்னை வளம் சார்ந்த வல்லுநர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட இந்த அமைப்பின் முதலாவது கூட்டத்தை அடுத்த மாதம் வவுனியாவில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(100)

# மீளமைக்கப்படுகிறது யாழ். அரச நிர்வாகம்; புனர்வாழ்வு, புனரமைப்பைத் துரிதமாக்க!

### யாழ். அரச அதிபர் பத்மநாதன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளை துரிதகதியில் மேற்கொள்ள வசதியாக அரச நிர்வாகக் கட்டமைப்பு மீள ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

யாழ்.செயலகத்தில் அனைத்து திணைக்களத் தலைவர்களும், பிரதேச செயலர்களும் கலந்துகொண்ட விசேட மாநாட்டின்போது மேற்படி நடவடிக்கைக்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு பணிகளில் அதிகளவு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமூகசேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரை புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு முதல் குடாநாட்டில் பாரிய புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றமையால் மேற்படி மீள் ஒழுங்கமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

(லி)

# அரசாங்கம்-புலிகள் சமாதான முன்னெடுப்புக்களே சர்வதேசத்தின் உதவிகளைத் தீர்மானிக்கின்றது!



சர்வதேசமும் விடுதலைப் புலிகளும்...

## தெற்குத் திசையினிலே.....

கொழும்பிலிருந்து இந்திரஜித்

நாடாளுமன்றத்தில் 2003ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதங்கள் இடம் பெறுகின்றன. மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும், சம அந்தஸ்தில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இதற்கிடையில் ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சிகளால் பல்வேறு இடையூறுகள் மற்றும் சவால்கள் கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

எனினும், சர்வதேச சமூகம் அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்புகளுக்குத் தமது பூரண ஆதரவை அளித்து வருகிறது. தமது நாட்டு நலன்கள் முழுமையாக, இலங்கையின் மீது திணிக்கப்படுவதை இந்த நாடுகள் உறுதிப்படுத்திக் கொண்டுள்ளன. சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் அனைத்து நாடுகளுமே இலங்கை அரசாங்கத்துடன் ஏதோ ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளமை இதற்கு உதாரணமாகும்.

அமெரிக்கா, சுதந்திர வான் பறப்பு ஒப்பந்தத்தை இலங்கையுடன் செய்துகொண்டுள்ள அதே நேரம், நோர்வே மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் வர்த்தக ஒப்பந்தங்களை செய்து கொண்டுள்ளன. இதேவேளை, இந்தியா இந்த விடயத்தில் தனது தேசியக் கொள்கைக்கு ஏற்ப கவனமான நகர்வை மேற்கொண்டு வருகிறது. இலங்கையுடன் வர்த்தக ஒப்பந்தங்களை செய்துள்ள இந்தியா, இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்திவரும் தமிழீழ விடுதலைப் புலிகளை, தூரத்தில் வைத்துப் பார்க்கவே முனைகிறது.

ராஜீவ்காந்தி கொலையின் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளை அருகில் இருந்து அணுகினால் அது தமது அரசியல் பாதையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என ஆளும் பாரதீய ஜனதா கூட்டணி எண்ணங்கொண்டுள்ளது.

ஏற்கனவே, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கொண்டுள்ள நெருக்கமற்ற போக்கைத் தள்ளிவைத்துவிட்டு, இந்திய அரசு - இலங்கை இனப்பிரச்சினையின் த்ர்வுக்கு உறுதியாக உழைக்கமுற்பட்டாலும் எதிர்க்கட்சிகள் அதனை பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை.

இதன் காரணமாகவே, இலங்கையில் இனப்பிரச்சினை தீர வேணடும் என்பதில் அக்கறை உண்டு எனினும், அதற்காக நேரடிப் பங்களிப்பைச் செய்ய முடியாது என இந்திய அரசு கூறிவருகிறது.

தடைகளை ஒரு பொருட்டாகக் கொள்ளாமல், அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து சமாதான நகர்வை வலியுறுத்தி வருகின்றன. அதற்கு ஆதரவையும் வழங்கி வருகின்றன. எனினும், இந்தியா தனது நிலைப்பாட்டில் மாற்றமின்றி உள்ளது. அத்துடன் இலங்கையின சமாதான முயற்சிகளுக்கு தற்சமயம் நேரடி ஆதரவை அளிப்பதன் மூலம், இலங்கையில் அமெரிக்கா போன்ற நாடுகளின் ஊடுருவலை ஆதரித்ததாக ஆகிவிடும் என்ற பெயரைத் தவிர்க்கும் முயற்சியிலும் இந்தியா இறங்கியுள்ளது.

நாளையதினம் ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் கூட இந்தியா மிகக் கவனமான முன்னெடுப்பையே எடுத்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளும் பங்குகொள்ளும் ஒஸ்லோ மாநாட்டில் தாமும் பங்குகொண்டால் அது தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்ததாக அமைந்து விடும் என இந்தியா கருதுகிறது.

இதுவரை இலங்கையின் மீது வெளிநாடுகளின் நிலைப்பாடுகளை இங்கு ஆராய்ந்தோர், இனி அந்த நாடுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் மற்றும் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடுகளை ஆராய்வர்.

இலங்கையில் கடந்த 20 வருடங்களாக நிகழ்ந்த போர் காரணமாக நாட்டின் முழுப் பொருளாதாரமும் செயலிழந்திருக்கிறது. வெளிநாடுகள் உதவி வழங்கினால் மாத்திரமே அடுத்தகட்ட அபிவிருத்திகளை மேற்கொள்ளமுடியும் என்ற நிலைக்கு இலங்கை அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

எனவே, மேற்குலக நாடுகளின் நலன்களுக்கு இசைய வேண்டிய கட்டாயத்துக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பல்வேறு ஒப்பந்தங்களையும் அது ஏனைய நாடுகளுடன் செய்து வருகிறது. இதன் மூலம் இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கும் அபிவிருத்திக்கான நிதியுதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை வலுவடைந்துள்ளது. இந்நிலையில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்களை அரசாங்கம் பெரிதுபடுத்தவில்லை. எதிர்க கட்சிகள் அரசாங்கத்தின் நடைமுறைகளை ஆட்சேபிக்கின்றன எனினும், சில நாடுகளின் விடயங்களில் இவை தளர்வுப் போக்குகளையே கடைபிடிக்கின்றன.

1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம், இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட அணுகுமுறையை எதிர்த்த - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன என்பன தற்சமயம், இந்தியத் தலையீட்டை வலியுறுத்துகின்றன. இந்த வலியுறுத்தலின் மறுபக்கம் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளின் தலையீடுகளை இந்தக் கட்சிகள் ஆட்சேபிக்கின்றன. இந்த வகையில், பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ள கருத்து இங்கு முக்கியமாக குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்கா, நோர்வே மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகள் இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக இவர் குற்றஞ் சுமத்தியுள்ளார். இந்திய அரசின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும்



லக்ஸ்மன் கதிர்காமர்

அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரையில், அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவை காட்டிலும் நோர்வே நாட்டையே அவர் கடுமையாக விமர்சித்து வருகிறார். சமாதான முன்னெடுப்புக்காகத் தம்மால் அழைக்கப்பட்ட நோர்வே, தம்மை அலட்சியப்படுத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தி வருகிறார். நோர்வே, இலங்கையின் உள் விவகாரங்களில் தொடர்ந்தும் தலையிடுமானால் தாம் இலங்கை மக்களின் நலன் கருதி கடுமையான நடவடிககையை எடுக்க வேண்டியேற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில், இலங்கை அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் தொடர்ந்தும் முறுகல் நிலை ஏற்பட்டு வருகிறது. இறுதியாக அமைச்சர்களின் நியமன விடயம் இருதரப்பினருக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்தியிருக்கிறது. பொதுஜன முன்னணிக்கு கட்சி மாறிவிடலாம் எனக் கருதப்பட்ட எட்டுப்பேரை பிரதமமந்திரி, அமைச்சரவைத் தகுதியற்ற அமைச்சர்களாக நியமிக்கக் கோரிய போதும், அதில் அவசர சேவைகளுக்கான அமைச்சர் நியமனத்தில் ஜனாதிபதி இணக்கம் தெரிவிக்கவில்லை. அவசர சேவைகளுக்கான அமைச்சர் நியமிக்கப்பட்டால் தம்மிடம் தற்சமயம் இருக்கும் அந்தப் பொறுபபு நழுவிப் போய்விடுமோ? என்ற அச்சம் ஜனாதிபதியை சிந்திக்க வைத்திருக்கலாம்.அல்லது கம் பஹா மாவட்டத்தின் ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளரான சரத சந்திர ராஜகருண இந்தப் பதவிக்கு அமர்த்தப்படுவது ஜனாதிபதிக்கு விருப்பமில்லாமல் இருந்திருக்கவும் வாய்ப்பிருக்கிறது. (சந்திரிகாவின் தேர்தல் தொகுதி என்ற படியால்)

எது எப்படியோ ஜனாதிபதிக்கும், ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையிலான முறுகல் தற்சமயம் வலுவடைந்திருந்தாலும் அது தீர்க்கக்கூடிய ஒன்று என்றே கருதப்படுகிறது. இவ்வாறான நிலையில் புத்தளம் மற்றும் காலிப் பகுதியில் சிங்கள சமூகத்தினருக்கும் முஸ்லிம் சமூகத்தினருக்கும் இடையில் இடம்பெற்றுள்ள வன்முறைகள், நாட்டின் சுமுக சூழ்நிலையை மீண்டும் கேள்விக்குரியதாக்கியுள்ளன. இரகசிய பொலிசாரின் தகவலின்படி, கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும் ஒஸாமா, முஜாகுதீன், நொக்ஸ் மற்றும் ஜெட் ஆகிய முஸ்லிம் குழுக்களே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. மறுபுறத்தில் பொலிசார் மீது இந்த வன்முறைகள் தொடர்பாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா குற்றம் சுமத்தியுள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்க, தமிழீழ விடுதலைப்புலிகளும் - இலங்கை அரசாங்கமும் மேற்கொள்ளும் சமாதான முன்னெடுப்புகள் மூலமே இலங்கைக்கான நிதியுதவிகள் கிடைக்கப்போகின்றன. இந்தநிலையில் ஜனாதிபதி உட்பட்ட எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கள் எவையும் பெரிய விடயங்களாக எடுபடப்போவதில்லை என்பது மாத்திரம் தெளிவு.

# யேசுவின் பிறப்பு உணர்த்துகின்ற உண்மைகள் என்ன?



பாவங்களின் கொடுமைகளை மானிடம் சுமந்து திரிவதை பல காலம் உய்த்துணர்ந்து, அதன் ஊழிக்கோலத்தை இனியும் பொறுக்க இயலாது, கருவறையின் திருவறையிலே மனித உருவம் கொண்டு மாண்பாளனாய் மனுவேடங்கொண்டவன்தான் எமது இரட்சணியக் காவலன் யேசுபிரான். யேசுவின் பிறப்புக் கால நாட்களை, அவரது அடியார்கள், அவரைப் பின்தொடர்பவர்கள் இன்னும் அவரது போதனைகளிலே விருப்பம் கொண்டவர்கள் அவரது பிறப்பு தினத்தை புனித நாளாக ஒவ்வோர் வருடமும் பிரகடனப்படுத்தி கொண்டாடுகிறார்கள். இது கத்தோலிக்க மதத்தினரின் பாரம்பரிய திருவெளிப்பாட்டின் புறநிலை மரபு. அவருடைய பிறப்பும், அதன் உந்துசக்தியும் விடுக்கும் அறைகூவல்தான் என்ன என்பதை இக்காலகட்டத்தில் நாம் சிந்திக்க வேணடாமா? ஒவ்வொரு வருடமும் அவரின் பிறப்பு நிகழ்வைக் கொண்டாடும் வேளை,- அவரின் பிறப்பினால் நாம் அறிந்து கொள்ளவேண்டியது என்ன? அவரின் பிறப்பு எமது ஆத்மீகத் தூய்மைக்கு எந்தளவு உதவுகிறதென்பதையாவது நாம் உணர்கிறோமா? என ஒவ்வொரு கிறிஸ்தவரும் தம்மைத் தான் கேட்பானாகில், கிறிஸ்துவின் பிறப்பின் உண்மை இரகசியத்தை ஓரளவு அறிந்தவர்களாக இருப்போம். எனவே, இந்நிலையில் நாம் எவரும் கிறிஸ்துவினுடைய புதுமை இலட்சியத்தை இன்னும் விசுவாசிக்க ஆயத்தம் இல்லை என்பதுதான் துல்லியமான கருத்து.

கருவறையில் கருக்கொண்ட எம் யேசுபிரான் எளிமையின் உருவில் தம்மை ஆக்கி, மானிடத்தின் எளிமையை தன்மயப்படுத்தி அந்த எளிமையின் சாயலில் ஓர் மாட்டுத்தொழுவத்தில் பிறக்க விரும்பினான். ஆகவே கிறிஸ்துவினுடைய இலட்சிய நோக்கம் - ஒடுக்கப்படுகிறவன், துன்பப்படுகிறவன், சுமக்க முடியாமல் தவிப்பவன், இவர்களின் இரட்சணியத்துக்கு, விடியலுக்கு வழி காட்டும் ஓர் தாரகையாய் தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டுமென்பதால், அவர் கண்டுகொண்ட பாதை எளிமை. அதனால்தான், தான் பிறப்பதற்கு தொழுவத்தைத் தேர்ந்தெடுத்தார். அவரது எதிர்கால தியாகப் பயணங்கள், அன்புப் பாதைகள் பிறப்பிலிருந்து தொடர்ச்சியாக, கட்டம் கட்டமாக அமையப் பெற்றாலும் அவருடைய பிறப்பும், பிறப்பு நாளின் மகிமையும் அவரைப் பின் தொடர்கின்ற அடியார்களுக்கு ஓர் முன்னறிவிப்பாகும்.

யேசுவின் பிறப்புதினம் ஓர் அறைகூவலாய் இருப்பதோடு மட்டு

## ஞாயிறு நற்சிந்தனை

மல்ல, அவருடைய திருவெளிப்பாடும் வருகையும், சுமை சுமக்கின்ற சாதாரண மக்களுக்கு சுமை தாங்கியாய் அமையப் பெற்றிருப்பதை எம் ஒவ்வொருவரின் புலனுணாவுகளால் அறியப் பெறலாம். யேசுவின் தத்துவார்த்த ஒப்பீடுகளில் இதுதான் மிகமுக்கியமானதுங்கூட. ஓர் புதிய மனிதநேய சமுதாயத்தை, நெறிபிசகா அகவாழ்வுத் தூய்மையை மானிடம் புரிந்து, அறிந்து, வாழ்வின் பயன்களைப் பேதமற்ற உணர்வுடன் தம்மிடையே பகிர்ந்து கொள்வதற்கு, யேசுவின் பிறப்பு தினம் ஓர் பச்சை விளக்கு. ஏனெனில் அவரின் பிறப்பு எளிமை. யேசுவின் பிறப்பிலிருந்து தொடர்கின்ற அவரது இலட்சியப்பணி அன்புக்கும், தியாகத்துக்கும் எடுத்துக்காட்டாக பல நற்காரியங்களை எமக்கு தமது குறைந்த ஆயுட்காலத்தில் விட்டுச் சென்றிருக்கிறார். இவற்றை இக்கால கட்டத்தில் மெய்யுணர்ந்து சிந்திப்போமானால், கிறிஸ்து பெருமானின் பிறப்பின் மகத்துவத்தை ஓரளவேனும் உணர்ந்தவர்களாக கருதப் பெறுவோம்.

கொலைக்குன்றின் மீது யேசுவின் உயிர் நீங்கும்போது, அவரிடமிருந்து அன்பு பீறிடுகின்றது. எப்படி? "பிதாவே இவர்கள் அறியாமல் செய்வதை மன்னியும்" என்று, அன்பின் ஏக்கம் அறைகூவலாக அவரால் அக்குன்றின் மீது பிரகடனப்படுத்தப்படுத்தப் பெறுகின்றது சாகும் வேளையிலும். அவர் உருமலர்த்திய அன்புப் பிரகடனம்தான் கிறிஸ்தவத்தை செழுமையடையச் செய்தது, புனிதப்படுத்தியது. அது மட்டுமல்ல அவர் விதைத்த அன்பும், தியாகமும் மானிடத்தை மேலும், மேலும் வளம்பெறச்செய்தது. அருளாளனாக, கொடையாளனாக, அக அழுக்கை ஒருங்கே சுத்தமாக்கி, மானிடத்தின் வறுமையை இன்னதென்று அறிந்து, அவற்றை நீக்குவதறகு, வருடா வருடம் தனது பிறப்பை மக்களுக்கு உணர்த்துவதற்கு ஏற்பட்ட தினம்தான் யேசுவின் பிறப்பு. இது வெறும் கேளிக்கை பிறப்பு தினமல்ல. அவரது திருவெளிப்பாடு உண்மையான அன்போடு, தியாக உணர்வோடு எதிர்கொள்ள வேண்டியது யேசுவின் நாமத்தை அங்கீகாரம் செய்கிறவர்களின் பெருங்கடனாகும்.

விழுமிய ஞானங்கள் வேதத்தில் கூறப்பட்டாலும் அவைகளுடைய உட்பொருளை அறிந்து அதற்கொப்பதாக நாம் நடக்கின்றோமா? இரட்சகன் யேசுவின் மனுககோலபிறப்பின் வாயிலாகத்தான் அதிக பட்சமான ஞான உணர்வுகளை அன்றைய நாளில் தன்னும் - சாதாரண மானிடம் சிந்திக்கின்றது, உணர்கின்றது. யேசுவின் பிறப்பு தினம் வெறும் கொண்டாட்டத்திற்கு மட்டும் பொருந்துவனவாக அமையப் பெறவில்லை. நாமனைவரும் மாசற்ற அகவுணர்வுகள் உள்ளவர்களாக மாறவேண்டுமென்ற பேருணர்வு கொண்டவர்களாகவும் மாற்றம் பெறுவதற்கு, அவரது சீலஞானம் கொண்ட பிறப்பு தினம், மானிடத்துக்கு ஒரு கலங்கரை விளக்காக அமையப் பெற்றிருப்பதை, இந்நாட்களில் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதிலும் கத்தோலிக்கன் என்று சொல்வதில் ஓர் தூய்மையான மன எழுச்சி இல்லாவிடின் பெயருக்கு கத்தோலிக்கன் என்று சொல்வதில் என்ன அர்த்தமுண்டு.

- இ. வரதராசா.

## -பி.பி.ஸி. இணையத்தளத்தின்-

# திரைப்பட இசை கணிப்பில் "தளபதி" பாடல் முதலிடம்!


எஸ்.பி.பி


கிளிவ் ரிச்சர்ட்

(லண்டன்)

உலகில் தற்போது மிகப் பிரபல்யமான பாடலாக 1991ல் வெளி வந்த தளபதி திரைப்படத்தில் வரும் "ராக்கம்மா கையைத் தட்டு" என்ற பாடல் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. உலகப் பிரசித்தி பெற்ற பீட்டில்ஸ் குழுவினர் மற்றும் லெட்செப்பிலின் பாடல் குழுக்களின் பாடல்களையும், "ராக்கம்மா" பாடல் முந்திக் கொண்டுள்ளதாக, பிரபலமான பாடலாக உலகில் விளங்குவது எது என்ற பி.பி.ஸி கருத்துக் கணிப்பின் முடிவில் தெரியவந்துள்ளது.



தளபதி படத்தில் ஒரு காட்சி


செயர்

எஸ்.பி.பாலசுப்பிரமணியம், சுவர்ணலதா ஆகியோர் பாடிய இப்பாடலுக்கு இளையராஜா இசையமைத்திருந்தார். பி.பி.ஸி உலக சேவை இணையத்தளம் நடத்திய கருத்துக் கணிப்பில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இரண்டாவது இடத்தை 1997ல் வெளியான கிளிவ் ரிச்சர்ட்டின் "நாம் இனிப் பேசப்போவதில்லை"(We dont talk anymore) என்ற பாடலும் மூன்றாம் இடத்தை 1998ல் செயர் பாடிய Believe என்ற பாடலும் பெற்றுள்ளது.இக் கருத்துக் கணிப்பீட்டிலிருந்து பி.பி.ஸி இணையதளத்தின் கருத்துக் கணிப்பில், இந்திய மக்களே அதிகமாகப் பங்குகொண்டு தமது வாக்குகளை இந்தியப்படப்பாடலுக்கு அளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நைஜீரிய உலக அழகிப் போட்டி லண்டனுக்கு இடமாற்றம்

## பத்திரிகைச் செய்தியால் வந்த வினை

(அபுஜான்)

நைஜீரியாவில் நடைபெறவிருந்த உலக அழகிப்போட்டி ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இப்போட்டிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த சில தினங்களாக நடைபெற்ற வன்முறையில் 100 பேர் பலியாகினர். இப்போட்டிகள் அடுத்த



மாதம் 7ம் திகதி லண்டனில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். முதலில் இப்போட்டி நைஜீரியாவில் நடைபெறுவதாக இருந்தது. கவனமாக அனைத்து விடயங்களையும் பரிசீலித்த பின்பே தாம் இம்முடிவை எடுத்ததாக உலக அழகிப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




வெள்ளி தொழுகையின் பின் அடிப்படைவாத முஸ்லிம் இளைஞர்கள் இப்போட்டிகளை ஆட்சேபித்து வன்முறையில் இறங்கினர். இதில் 100 பேர் பலியாகினர். 500 பேர் காயமுற்றனர். தற்போது கலவரம் நடந்த கடுனா நகரில் ஊரடங்கு அமுலில் உள்ளது.

உள்ளூர் பத்திரிகை ஒன்று உலக அழகிப்போட்டி தொடர்பாக வெளியிட்ட செய்தியே வன்முறைக்கு வித்திட்டது. "இந்த அழகிகளைக் கண்ணுற்றால் அல்லா கூட இவர்களில் ஒருவரை திருமணம் முடிக்க ஆசைப்படலாம்" என வெளியான ஒரு கருத்தே தற்போது இப்போட்டிகளை நைஜீரியாவில் நடத்த முடியாது தடுத்துள்ளது.

இப்பத்திரிகைக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கும் என அரச அதிகாரிகள் உறுதி கூறியுள்ளனர். தற்போது இப்பத்திரிகை தனது கருத்துக்கு மன்னிப்பு கோரியுள்ளது. அபுஜானின் பிரதான பள்ளிவாசல் அருகிலேயே இந்த உலக அழகிப்போட்டி நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆஷஸ் கிண்ண கிரிக்கட் போட்டி இங்கிலாந்து அணி மோசமான நிலை

அடிலெயிட்டில் நடைபெறும் ஆஷஸ் கிண்ணப் போட்டியின் இரண்டாவது டெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் ஸ்கோர் விபரம்

இங்கிலாந்து: 342 & 36-3

ஆவுஸ்ரேலியா: 552-9


தனது 14 ஆவது சதத்தை அடித்த மகிழ்ச்சியில் பொன்டிங்


ஆரம்ப நிலையிலேயே ஆட்டமிழந்த மார்க்கஸ் ரெஸ்க் கோதிக்


நசீர் ஹுசைன் ஆட்டமிழந்தபோது

# தனியொருவரின் தலைமை இனி வேண்டாம்; ராணுவ கட்டமைப்பில் மறுசீராக்கம் தேவை!

## முன்னாள் ராணுவத் தளபதியும் வட,கிழக்கு ஆளுநருமான அசோக ஜெயவர்த்தன கூறுகிறார்

*சிறிலங்காப் படைத்துறையை மறுசீரமைப்பது தொடர்பாக ஆராய்ந்த அரசாங்கக் குழுவில் ஒரு அங்கத்தவரான மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன -முன்னாள் இராணுவத் தளபதியும் தற்பொழுது வடக்கு- கிழக்கு மாகாணசபையின் ஆளுநருமாவார். தனது முன் திட்ட ஆலோசனைகள் ,பரிந்துரைகளை இவர் சமீபத்தில் ஜனாதிபதியிடமும் பாதுகாப்பு அமைச்சரிடமும் கையளித்தாகக் கூறினார்.*

### அரசியல் திட்ட நிலைப்பாடு

தேவையற்ற தாமதங்களை நீக்கி உடனடியாக நடைமுறைப்படுத்தக்கூடிய செயல் வடிவத்தினை பாதுகாப்புச் செயன்முறையில் அமுல்படுத்தக்கூடிய வகையில், மாற்றங்களை ஏற்படுத்தும்போது, அரசியல் ரீதியான முரண்பாடு தோன்றுமாயினும், பாதுகாப்பு விடயங்களில் விரைவான முடிவுகளை எடுக்கலாம் என நான் நம்புகிறேன்.

எது எவ்வாறாயினும் நாட்டின் முழுப்பாதுகாப்புத் துறைக்கும் பொறுப்பாக இராணுவத் தொழில்சார் அனுபவமுள்ள ஒருவரை நியமிப்பது அரசியல் ரீதியாக முரண்பாடுடையதாக இருக்கும் என நான் நம்பவில்லை. அதே வேளை அவ்வாறான நியமனம் நியாயபூர்வமானதும் கூட.

### தேசிய பாதுகாப்புச் சபை

நாட்டின் சூழ்நிலையைக் கருத்தில் கொள்ளும்போது தற்பொழுது பிரேரணையில் உள்ள தேசிய பாதுகாப்புச்சபையானது அரசியல் ரீதியாக உள்ளார்த்தமான பிரச்சனைகளை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, தேசிய பாதுகாப்புச் சபையானது தேசியளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமானால், அரசியற்கட்சிகளிலும் பார்க்கத் துலாம்பரமான பார்வையை தேசிய பாதுகாப்புச் சபைக்கு எற்படுத்திக் கொடுக்கும். ஆனால் ஜனாதிபதியும் அமைச்சரவையும் ஒரே கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தால், தேசிய பாதுகாப்பு சபையின் அங்கத்தவர்களான பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைகளின் பிரதம தளபதிகளின் தலைவர் ஆகியோரை ஜனாதிபதி மட்டும் சந்தித்து விடயங்களை கையாள்வார். ஆனால மறுபுறமாக ஜனாதிபதியும் அமைச்சரவையும் வேறுவேறான அரசியற்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால், இவ்வாறான நிலை ஏற்படாது. தேசிய பாதுகாப்புச் சபையில் கொள்கைத் தீர்மானங்கள் எடுப்பதில் பலரும் காணப்படுவதானால் முப்படைகளின் பிரதம தளபதிகளின் தலைவர் (கூட்டுப்படைகளின் தளபதி) பாரிய நெருக்கடிக்குள்ளாக வேண்டிய நிலையில் காணப்படுவார். எனவே நிரந்தரமான இராணுவ தொழில்சார் அனுபவமிக்க தலைவர் நியமிக்கப்பட வேண்டும்.கடந்த பல வருடங்களாக அவ்வப்போது காலத்திற்குக் காலம் தோன்றும் நெருக்கடிகளின் போதும், தேசிய பாதுகாப்புச் சபை நாளாந்தம் கூடி நிலைமைகளை ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தது. ஆனால் மிகவும் நெருக்கடி மிகுந்த வேளைகளில் தேசிய பாதுகாப்புச் சபை தனித்தே முடிவுகளை எடுத்துள்ளது. அவ்வேளைகளில் தேசிய அரசியல் தலைமை தங்கள் பொறுப்புக்களில் பங்கேற்றுக் கொள்வதில்லை என்பதனை நாம் இங்கு அவதானிக்க வேண்டும்.

எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதில் உள்ள செயன்முறைகளில் பல விதமான நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன எனினும், ஜனாதிபதிக்குப் பதிலாக ஜனாதிபதியின் செயலாளர், செயலாளரின் ஆலோசகர் என பலதரப்பட்டவர் தேசிய பாதுகாப்புச் சபையின் தீர்மானம் எடுப்பதில் பங்கேற்க வேண்டிய தேவையும் உண்டு.

தேசிய பாதுகாப்புச் சபையில் அமைச்சரவையின் செயலாளர் அல்லது மேலதிகச்செயலாளர் அங்கத்துவம் பெற்றிருக்க வேண்டும். என்பது எனது ஆலோசனை. அதேபோல்-

மேலும் தேசிய பாதுகாப்புக்கு மிக அவசியமாக-" இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணியவாறு தேசிய பாதுகாப்புச்சபை அமைய வேண்டும். வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தேசிய பாதுகாப்புச் சபைக்கு ஆலோசகராகவும் கடமையாற்ற வேண்டும்.

கூட்டுப்படைகளின் தளபதி மட்டுமே தனித்த ஆலோகராக தேசிய பாதுகாப்புச் சபைக்கு இருக்காது- இராணுவத்தளபதி, விமானப்படைத் தளபதி, கடற்படைத்தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோர் நிரந்தரமான ஆலோசகர்களாக தேசிய பாதுகாப்புச் சபைக்கு இருக்க வேண்டும்.

கடந்த காலத் தோல்விகளைக் கருத்திற் கொண்டு யுத்தங்களின் தள நிலவரங்களை, சரியான தகவல்களைத் தேசிய பாதுகாப்புச் சபைக்கு கொடுக்கவேண்டி இருப்பதால் தரை நடவடிக்கைகளுக்கும் கடல் மற்றும் கடற்கரை நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இரு தளபதிகளை நியமித்து, அவர்களையும் தேசிய பாதுகாப்புச் சபையில் அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தேசிய பாதுகாப்புச் சபையும், பாதுகாப்புச்சபையும் சில


விமானப்படை, கடற்படை, இராணுவத் தளபதிகள்

நடைமுறை விடயங்களில் முரண்பட்டுக் கொள்கின்றன. அவற்றை முரண்பாடுகளற்ற முறையில் கையாளத்தக்கதாக திட்டங்களை வரைய வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

### ஆயுதப்படைகளின் தலைமை

படைகளுக்குத் தலைமையாக ஒரு தளபதி மட்டும் இருக்காது, இன்று பல நாடுகளில் இருப்பது போல் இரட்டைத் தளபதிகள் கூட்டாகப் பொறுப்பாக இருக்கக்கூடியதான இணைத்தளபதிகளை நியமிக்க வேண்டும் என நான் நம்புகின்றேன். படைத்தரப்பில் இணைத்தளபதிகளை நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிக்க வேண்டும். பிரித்தானியாவில் இவ்வாறான நடைமுறை இருப்பது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக பாதுகாப்புத்துறையில் இராணுவ நிபுணத்துவம் மற்றும் தொழில்சார் அனுபவமுடையவர்கள் தலைமைப் பதவியில் இருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

படைஅதிகாரிகளின் இளைப்பாற்று வயதெல்லை முன்பு நிறைந்த மூப்பு வயதிலேயே நடைபெற்றது. ஆனால் தற்பொழுது உலக நாடுகளிலே உரிய வயதிலேயே இளைப்பாற்றுச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. அதாவது 55 வய

(10ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உங்கள் வனப்புக்கு மேன்மேலும் மெருகூட்டிடும் வகையில் நவநாகரிக பிறேம்களிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ள, முக அமைப்புக்கேற்ப அழகிய சங்குப்பற்களை உறுதிமிக்கதாய்ப் பொருத்திக் கொள்ள, மிதந்த பற்களுக்குச் சிறந்த முறையில் கிளிப் போட்டுக் கொள்ள இன்றே நாடுங்கள்

**எரிக் கனேஸ்**
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கொக்குவில், சுன்னாகம்.
T.P 2222486 (சி-198)

# பாதுகாப்பு, மீள்குடியேற்றம் ஆராய குழுக்கள் அமைக்க இணக்கம்

## அம்பாறை பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் முடிவு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டப் பாதுகாப்பு உப குழுவின கூட்டம் நேற்று அக்கரைப் பற்று பிரதேச செயலகத்தில் மிகவும் சுமுகமான சூழலில் நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, பிரிகேடியர் சுமித் பாலசூரிய, கப்டன் கோலித குணதிலக, அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிறிவர்த்தன, ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அப்துல் மஜீத் ஆகியோர் அரச தரப்பில் பங்குபற்றினர்.

புலிகள் தரப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா மற்றும் அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தனன் ஆகியோரும் மட்டு - அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பானுகா, அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சீதா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சார்பில் அம்பாறை மாவட்டத் தலைவர் கார்ல் ஜூலிசன் தலைமையில் ஆறுபேர் கொண்ட குழு பங்கேற்றது.

இக் கூட்டத்தில் - மீள்குடியேற்றம் சம்பந்தமாகவும், பாதுகாப்பு நிலவரம் சம்பந்தமாகவும் இரண்டு குழுக்களை நியமிக்க இணக்கம் காணப்பட்டது.

இதன்படி - ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும், இயல்புநிலை மற்றும் அபிவிருத்திக்கான இணைந்த வேலைத்திட்டக்குழு என்னும் பெயரில் அமைக்கப்படும் குழுவானது - அவ்வப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவது பற்றி ஆராயவுள்ளது.

இக்குழுவில் - அவ்வப்பகுதிப் பிரதேச செயலர் தலைவராகவும், அரசதரப்பு, புலிகள் தரப்பு மற்றும் விவசாயம், மீன்பிடி, ஏனைய பொருளாதார அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இடம்பெறவுள்ளனர்.

இரண்டாவது குழு, பாதுகாப்புச் செயற்திட்டக்குழு என்னும் பெயரில் இயங்கவுள்ளது. இக்குழுவில் - படைத்தரப்போடு, புலிகளும், இனரீதியாகப் பிரதிநிதிகளும் பங்குபற்றவுள்ளனர். இக்குழுவின் இணைப்பாளராக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு செயற்படவுள்ளது

இதேவேளை திருக்கோவில் ஆஸ்பத்திரியிலிருந்து, அடுத்த வருடம மார்ச் முதலாந் திகதியளவில் விசேட அதிரடிப்படையினர் விலகிக் கொள்வார்கள் எனவும்,

வீதித்தடைகள், இராணுவக் காவலரண்கள் படிப்படியாக விலக்கப்படுமென்றும் நேற்றைய சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

இதைவிட- பொதுக்கட்டடங்கள், பாடசாலைகள என்பவற்றிலிருந்து விசேட அதிரடிப் படையினர் விலகுதல்,

முஸ்லிம் மக்களுடனான இயல்பு நிலையை ஏற்படுத்துதல்,

உள்ளூரில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துதல்,

விடுதலைப்புலிகளுக்கும் அதிரடிப்படையினருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்துதல்,

வீரமுனை, செல்வவழி, பத்தமேட்டை, தோணிக்கல் போன்ற இடங்களில் நிலவும் காணி சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகிய விடயங்களும் நேற்றுக் கலந்துரையாடப்பட்டன. எனினும் இவற்றில் முடிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

# துறைமுக களஞ்சிய அறையில் துண்டாக்கப்பட்ட சடலம்!

## குவைத்திலிருந்து 3 வருடங்களுக்கு முன் வந்ததாம்

(கொழும்பு)

குவைத்திலிருந்து கொண்டு வரப்பட்டு, எவராலும் உரிமை கோரப்படாத நிலையில் மூன்று வருடங்களாக கொழும்பு கப்பல் களஞ்சியமொன்றில் இருந்த பெட்டியொன்றினுள்ளிருந்து பல பகுதிகளாக வெட்டப்பட்டிருந்த பெண்ணின் உடலொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள கப்பல் கம்பனி ஒன்றினூடாக இந்தப்பெட்டி குவைத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருந்தது. ஆனால் மூன்று வருடங்களாக எவரும் இந்தப் பெட்டியை எடுத்துச்செல்லவில்லை.

இதனால் சட்டவிதிகளின்படி பெட்டியை ஏலத்திற்கு விடுவதற்காக, அதனை உடைத்தபோதே அதனுள் கண்டபடி வெட்டப்பட்டிருந்த பெண்ணின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. இச்சம்பவம் கொழும்பு களஞ்சிய வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கொழும்பு மாநகரில் நமது ஈழநாட்டுடனான தொடர்புகளுக்கு...

எமது பத்திரிகை நிறுவனத்தின் கிளை அலுவலகமானது **2 ஆவது மாடி, கொழும்பு பிளாசா, இல.50, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06** என்ற முகவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள், பொதுமக்கள், விளம்பர அபிமானிகள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

T.P. இல. - 074 - 512830
0777 - 316258
Fax இல. - 074 - 512830

நிர்வாக இயக்குநர்
(நமது ஈழநாடு) (ஈ)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் முகாமையாளர்
மார்க்கண்டு சிறிநாதன் அவர்களின் அன்புத் துணைவியார்
**திருமதி சிறிநாதன் கங்காதேவி**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

உரிமையாளர், ஊழியர்கள்,
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்.
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-203)

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
E.Mail - thangan 672002 @ yahoo .com
T.P-021-2222588

தரம் 6 முதல் பல்கலை மற்றும் அலுவலர்கள் வரை ஒரே கூரையின்கீழ் மிகத் தரமான கல்வியை வழங்குகின்றது.

05-12-2002 இல் ஆரம்பிக்கும் புதிய தவணைக்கு தரம் 6 முதல் A\L வரையான புத்தக வகுப்புகளுக்கு (Text books) புதிய அனுமதிகள் தற்போது நடப்பில் உள்ளது.

01-12-2002 இல் புதிய இலக்கண வகுப்பு பிரிவு V ஆரம்பம்
Sat and sun 5p.m (old)

புதிய அனுமதிக்கான பதிவுக் கட்டணம் 100/-
இலக்கணக் கற்கை நெறிக்கான முழுக்கட்டணம் 1000/-
புத்தக வகுப்பிற்கான வருடாந்தக் கட்டணம் 600/-

மேலதிக விபரங்களுக்கு,
ஆசிரியர்
K.T. Rajah(S.S)
Director.
Why fear, We are here (சி-191)

## ஒஸ்லோ..

வில்லை எனக் குறிப்பிட்ட அப்பேச்சாளர், இது குறித்த விடயங்கள முடிவுக்கு வந்து விட்டதாகக் குறிப்பிட்டார். ஒஸ்லோ மாநாட்டில் பங்குகொள்ளும் எந்த இந்தியப் பிரதிநிதியும் இந்தியாவின் அரசியல் பிரதிநிதியாகக் கருதப்படமாட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தனியொருவரின்...

தினை அடைந்ததும் இளைப்பாறுவதே அது.

அதேபோல்- எமது நாட்டிலும் உரிய வயதினை அடைந்ததும் இளைப்பாறிக் கொண்டு புதியவர்களுக்குச் சந்தர்ப்பங்களை அளிக்க வேணடும். யுத்தம் நடக்கும் காலங்களில் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து இளைப்பாறும் விடயங்களில் கவனம் எடுக்க வேண்டும் என்பதையும் நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

### கூட்டு நடவடிக்கைகளின் தலைமையகம்

பிரித்தானியக் கட்டமைப்பின் பிரகாரம் தரை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இணைத்தளபதிகளது நடவடிக்கைகளை செவ்வனே செய்ய ஒரு கட்டளை அமைப்பு (**Operational Structure**) உருவாக்கப்பட வேண்டும். உள்நாட்டுப் பாதுகாப்பு விடயங்களும் இக்கூட்டு நடவடிக்கைகளின் தலைமையகத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கடற்கரையோர நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட இணைத்தளபதிகளுக்கும் மேற்படி கட்டளையமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

தற்பொழுது இருப்பது போலவே லெப்ரினன்ட் ஜெனரல் தரத்தளபதியே இலங்கையின் இராணுவத்திற்கு தளபதியாக இருத்தல் வேண்டும்.

### புலனாய்வுத்துறையும் அதன் அமைப்பும

இராணுவ அமைப்பிற்குள் புலனாய்வுத்துறை மிக உயர்ந்த நிலையில் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இராணுவக் கட்டமைப்புக்குள் இணைந்த புலனாய்வுத்துறை பற்றி இந்நோக்கில் இன்றுவரை முக்கியமான விடயங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை எனபது குறிப்பிடத்தக்கது.

# படையினர் சடலம் எரிக்கப்பட்ட பம்பைமடு இனி புனிதப் பிரதேசம்

## வவுனியாப் பொலிஸார் அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள பம்பைமடுவில் ஒரு பகுதி புனிதப்பிரதேசமாக வவுனியாப் பொலிசாரால் அறிவிக்கப்பட்டுள்ளது. பம்பைமடுவில் உள்ள இப்பகுதியிலேயே 1999 இல் சுமார் 100 படையினரின் பழுதடைந்த சடலங்கள் படையினரால் எரியூட்டப்பட்டன.

கிளிநொச்சியை மீளக்கைப்பற்றும் புலிகளின் தாக்குதலில் 700 படையினர் அப்போது கொல்லப்பட்டதாகவும் இவர்களில் 100 பேரின் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கமுடியாத நிலையில் பழுதடைந்திருந்ததாகவும் இச்சடலங்களே இப்பகுதியில் எரிக்கப்பட்டதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

படையினரை இவ்வாறு எரியூட்டிய இடமே புனிதப்பகுதியாக தற்போது பொலிசாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச அளவில் நேரடி ஒளிபரப்பாக தலைவர் பிரபா உரை

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளை ஒட்டிய தமிழீழத் தேசியத் தலைவரின் உரையை நேரடியாக ஒலி, ஒளிபரப்புச் செய்வதற்குப் பல சர்வதேச ஒலி, ஒளிபரப்பு நிறுவனங்கள் முயற்சி செய்து வருகின்றன. இதற்கான நடவடிக்கைகளில் மேற்படி நிறுவனங்கள் மிக மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சங்கரப்பிள்ளை சரஸ்வதி

பன்னாலையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சரஸ்வதி நேற்று (23.11.2002) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் (செல்லப்பா) அன்பு மனைவியும், சௌந்தரநாயகி (டென்மார்க்), சிவபாலசுப்ரமணியம், வரதராஜப்பெருமாள், பூரணலிங்கம், சோதிமலர், பத்மநாதன்(லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்ரமணியம் (டென்மார்க்), சந்திராதேவி, தங்கம், யோகராணி, விநாயகமூர்த்தி(சவூதி), யோகறஞ்சினி(லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2002)ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பன்னாலை கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பளை.

தகவல்:
சோதிமலர் (சோதி)
மகள் (041)

## திருமதி சிறிநாதன் கங்காதேவி

காரைநகர், நாவலடிக்கேணியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிறிநாதன் கங்காதேவி நேற்று (23.11.2002)கொழும்பில் காலமானார். அன்னார் மார்க்கண்டு சிறிநாதனின் (மகாலட்சுமி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அருமை மனைவியும், குழந்தையின் அருமைத் தாயாரும், பேரம்பலம்- லீலாதேவி தம்பதிகளின் அன்பு மகளும், கௌரிதேவி, தவமணிதேவி, கமலாதேவி, மயூரன், சிவகரன் ஆகியோரின் அன்புச சகோதரியும் மார்க்கண்டு, இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், மங்கையர்க்கரசி, மகேஸ்வரி(டென்மார்க்), தனலட்சுமி, சரஸ்வதி(ஆசிரியர்), சிறிதரன்(லண்டன்), விஜயகலா , ராசன் (குருநாகல்) ஆகியோரின் மைத்துனியும் தில்லைநாதன், கிருபாணந்தன் (டென்மார்க்), யோகநாதன், மகேஸ்வரன்(இந்து கலாசார அமைச்சர்) ஆகியோரின் சகலியும் சுதன், நிவாசினி(டென்மார்க்), பவதாரணி, பிரணவன், பவித்ரா ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2002) அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நாவலடிக்கேணி,
காரைநகர்.

தகவல்:
மா. சிறிநாதன்
(கணவர்) (சி-202)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.